










We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஜூன் - 2019

*We Are Here..!! To Guide You..!!*











# We Shine Study Circle

# குறி தவறினாலும் உன் முயற்சி..!!

# அடுத்த வெற்றிக்கான பயிற்சி..!!

Main Office @

**Weshine Study Circle**

4(8B) Rangaswamy Street, (Near Adayar Bhavan)

Pudhuvai Nagar West, Chromepet, Chennai, Tamil Nadu 600044

Phone : 8939144344,8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block, 7th Main Road,
Annanagar, (Next To Metro Water Pump),
Chennai, Tamil Nadu 600040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




04 - 08 தமிழக நிகழ்வுகள்

09 - 16 இந்திய நிகழ்வுகள்

16 - 29 உலக நிகழ்வுகள்

29 - 34 விருதுகள்

35 - 38 நியமனங்கள்

39 - 43 அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

43 - 51 விளையாட்டு நிகழ்வுகள்

51 - 53 வர்த்தக நிகழ்வுகள்

53 - 62 முக்கிய தினங்கள்

62 - 63 புத்தகங்கள்









# தமிழக நிகழ்வுகள்

1. தமிழகத்தின் சமூக நலத் திட்டங்களில் பயன்பெற ஆண்டு வருமானத்தை எவ்வளவு ரூபாய் உயர்த்தியுள்ளது தமிழக அரசு?

**விடை:** ரூ.72 ஆயிரம்

**விளக்கம்**

- தமிழகத்தில் செயல்படும் சமூக நலத் துறை திட்டங்களில் பயன்பெறுவதற்கான வருமான உச்சவரம்பு ரூ.72 ஆயிரமாக உயர்த்தியது தமிழக அரசு.
    - குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.24 ஆயிரத்தில் இருந்து 72 ஆயிரமாக உயர்வு.

2. நாட்டில் மூன்றாம் பாலினத்தவருக்காக முதல் முறையாக தனிப்பிரிவை அமைத்த மருத்துவமனை எங்குள்ளது?

**விடை** : சென்னை, தமிழ்நாடு

**விளக்கம்**

- சென்னையில் உள்ள ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையானது மூன்றாம் பாலினத்தவருக்கான சுகாதாரப் பாதுகாப்புத் தேவைகளுக்கென இயங்கும் ஒரு முழு நேர சிறப்புப் பிரிவைத் தொடங்கியுள்ளது.
    - நாட்டில் மூன்றாம் பாலினத்தவருக்காக தனிப் பிரிவை ஒரு மருத்துவமனை கொண்டிருப்பது இதுவே முதல் முறையாகும்.
    - பத்து வருடங்களுக்கு முன்பு 2009ஆம் ஆண்டு இதே மருத்துவமனையில் முதன் முறையாக திருநங்கைக்குப் பாலியல் மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

3. டிஜிட்டல் சாகி திட்டம் சமீபத்தில் எங்கு தொடங்கப்பட்டுள்ளது?

**விடை**: தமிழ்நாட்டிலுள்ள விழுப்புரம் மாவட்டம்

**விளக்கம்**

- கிராமப்புற பெண்களுக்கு டிஜிட்டல் நிதி ஒதுக்கீடு செய்வதற்கான ஒரு திட்டமான ‘டிஜிட்டல் சாகி’ “Digital Sakhi”-ஐ, L&T நிதி சேவைகள் (LTFS) தமிழ்நாட்டிலுள்ள விழுப்புரம் மாவட்டத்தின் இரண்டு கிராமங்களில் தொடங்கியுள்ளது.

4. திருவாரூர் - காரைக்குடி தடத்தில் ஜுன் 1 முதல் 30 வரை செலுத்தப்படவுள்ள சிறப்பு இரயில் எது?

**விடை**: DEMU சிறப்பு இரயில்

**விளக்கம்**

- திருவாரூர் - காரைக்குடி தடத்தில் ஜுன் 1 முதல் 30 வரை DEMU சிறப்பு இரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வேயின் திருச்சி கோட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

5. தென்மேற்கு பருவ மழை காலம் எப்போது?

**விடை** : ஜுன் - செப்டம்பர்

**விளக்கம்**

- தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை தொடங்கியது.
    - ஜுன் மாதம் தொடங்கி செப்டம்பர் வரை நான்கு மாதங்கள் நீடிக்கும்.
    - மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் இம்மழையால் பயன்பெறும்.

6. தேசிய நெல் திருவிழா எங்கு நடைபெற்றது?

**விடை** : திருத்துறைப்பூண்டி (திருவாரூர் மாவட்டம்)

**விளக்கம்**

- திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் தேசிய நெல் திருவிழா நடைபெற்றது
    - பாரம்பரிய நெல் ரகங்களை பாதுகாக்கும் விதமாக இவ்விழா நடைபெறுகிறது
    - பாரம்பரிய விதைகளைப் பாதுகாக்க வேளாண் பல்கலைக்கழகம் "பாரம்பரிய மற்றும் கிரியோ பிரிசர்வேஷன் ஆகிய இரு முறைகளில் பாதுகாத்து வருகிறது.

7. தில்லியில் இருந்தபடியே தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் அனுமதி, நிதி போன்றவற்றை பெறுவதற்கு தமிழ்நாடு அரசு நியமித்துள்ள பொறுப்பு அதிகாரி யார்?

**விடை:** R. ராதாகிருஷ்ணன்

**விளக்கம்**

- தில்லியில் இருந்தபடியே தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் திட்டங்கள் மற்றும் அனுமதி, நிதி போன்றவற்றை பெறுவதற்கு புதிய அதிகாரியை தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை துணைச்செயலாளர் சு.ராதாகிருஷ்ணன் பொறுப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவர், மத்திய அரசின் அனைத்து முக்கியமான திட்டங்கள், திட்டப்பரிந்துரைகள், நிலுவையிலுள்ள திட்டங்கள் போன்றவற்றைக் கவனித்து, துறை அதிகாரிகளுக்கு உதவி செய்வார்.

8. வ.உ.சி துறைமுக அறக்கட்டளை எங்கு அமைந்துள்ளது?

**விடை**: மன்னார் வளைகுடா

**விளக்கம்**

- தூத்துக்குடியில் உள்ள வ.உ.சி துறைமுக அறக்கட்டளை மற்றும் மத்திய கிடங்குக் கழகம் ஆகியவை நேரடித் துறைமுக நுழைவு (Direct Port Entry) வசதிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
    - DPE ஆனது தொழிற்சாலைகளிலிருந்துச் சரக்குக் கொள்கலன் முனையத்திற்கு சரக்குக் கொள்கலனின் நேரடி இயக்கத்தை ஏற்படுத்தும். இது கொள்கலன் சரக்கு நிலையத்தில் எந்தவொரு இடைநிலை கையாளுதலும் இல்லாமல் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும்.
    - தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய துறைமுகம் வ.உ.சி துறைமுக அறக்கட்டளையாகும். இது மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ளது.

9. தமிழகம் முழுவதும் நெகிழி பொருள் தடை எப்போது நடைமுறைக்கு வந்தது?

**விடை:** ஜனவரி 1, 2019

**விளக்கம்**

- நெகிழி பொருள் (பிளாஸ்டிக்) விற்பனை செய்தால் அபராதம் விதிக்கும் நடைமுறை தமிழகம் முழுவதும் அமலுக்கு வருகிறது.
    - ரூ.500 முதல் 5 லட்சம் வரை அபராத தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
    - தமிழகம் முழுவதும் நெகிழிப் பொருள்களை பயன்படுத்தவும் விற்பதற்கும் 2019 ஜனவரி 1 முதல் தமிழக அரசு தடை விதித்தது.

10. சமீபத்தில், தமிழ்நாட்டில் தொடங்கப்பட்ட காணாமல் போன செல்போன்கள் மற்றும் இருசக்கர வாகனங்களை கண்டுபிடிக்க உதவும் செயலி எது?

**விடை:** DIGICOP Version – 2

**விளக்கம்**

- காணாமல் போன செல்போன்கள் மற்றும் இருசக்கர வாகனங்களை கண்டுபிடிக்க உதவும் "DIGICOP version2" என்ற செயலி தொடங்கி வைக்கப்பட்டது.

  சென்னை பெருநகர காவல்துறையின் DIGICOP செயலியில் CCTNS என்ற புதிய சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் தாங்களிருக்கும் இடத்திலிருந்தே காவல்துறையில் புகாரளிக்க இந்தப் புதிய சேவை உதவுகிறது.

11. சமீபத்தில் 15 வது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நகராட்சி எது?

**விடை:** ஆவடி

**விளக்கம்**

- திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆவடி சிறப்பு நிலை நகராட்சியானது 15வது மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது
  - இந்தப் புதிய மாநகராட்சியானது ஒரு மேயர் ஒரு ஆணையம் ஒரு நிலைக் குழு, செயல்பாட்டுக் குழு மற்றும் ஒரு ஆணையரைக் கொண்டிருக்கும்.
  - தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 என்ற சட்டத்தின் விதிமுறைகள் எந்தவொரு விதத்திலும் ஆவடிக்குப் பொருந்தாது.
  - ஆவடி மாநகராட்சியின் விதிமுறைகள் கோயம்புத்தூர் நகர மாநகராட்சிக் கழகச் சட்டம், 1981 ஆகியவற்றுடன் பொருந்தி அமைவதாக உள்ளது. எனவே ஆவடி மாநகராட்சிக்காக கோயம்புத்தூர் நகர மாநகராட்சிக் கழகச் சட்டம் 1981-ன் விதிமுறைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

12. பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கீடு 50 சதவீதமாக உயர்த்த சட்டதிருத்தம் மேற்கொள்ளப்பட்ட ஆண்டு என்ன?

**விடை** : 2016

**விளக்கம்**

- கிராம ஊராட்சிகளில் பெண்களுக்கு 53% இட ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு துறை தகவல்.

- தலைவர் பதவி இடங்களில் மாவட்ட ஊராட்சிகளில் அதிகபட்சமாக 52% இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு 33 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக கடந்த 2016-ம் ஆண்டு சட்டதிருத்தங்கள் கொண்டுவரப்பட்டது.

13. இந்தியாவிலேயே முன்மாதிரியாக எந்த மாநிலத்தில் விவசாயிகளுக்கு இ - அடங்கல் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது?

**விடை :**தமிழ்நாடு

**விளக்கம் :**

- இந்தியாவிலேயே முன்மாதிரியாக தமிழகத்தில் விவசாயிகளுக்கு இ-அடங்கல் வழங்கும் திட்டம் ஜுலை முதல் அமலுக்கு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு விவசாயியும் எந்தெந்த பருவத்துக்கு, எந்த வகையான பயிரை,எவ்வளவு பரப்பில் பயிரிட்டுள்ளோம் என்பதை நேரடியாக பதிவு செய்யலாம்.

14. தமிழகத்தின் 46-வது தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை:** க.சண்முகம் I.A.S

**விளக்கம்**

- தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலாளராக க. சண்முகம் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் தமிழகத்தின் 46- வது தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் தமிழக அரசின் நிதித்துறை செயலாளராக இருந்து வந்தார்.
  - மத்திய அரசு தேர்வானை பணியாளர் குழுமம் இவரது பெயரை பரிந்துரை செய்தது.

## இந்திய நிகழ்வுகள்

1. மத்திய அமைச்சரவை சிறு குறு வணிகர்களுக்கு மாத ஓய்வூதியமாக எவ்வளவு வழங்க உள்ளது?

**விடை** : ரூ.3000

**விளக்கம்**

- சிறு குறு வணிகர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் தெரிவித்துள்ளது.
    - மாத ஓய்வூதியமாக ரூ.3000 வழங்க அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

2. நீர் வள மேம்பாட்டிற்காக மத்திய அரசு புதிதாக உருவாக்கியுள்ள அமைச்சகம் எது?

**விடை:** "ஜல் சக்தி"

**விளக்கம**

- "ஜல் சக்தி" என்ற புதிய அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது மத்திய அரசு.
    - நீர் வள ஆதாரங்கள், கங்கை தூய்மைப்படுத்தல் அமைச்சகம், குடிநீர் விநியோகம் ஆகிய அமைச்சகங்களை ஒருங்கிணைத்து "ஜல் சக்தி" என்ற அமைச்சகத்தை உருவாக்கியுள்ளது.
    - ஜல் சக்தி துறையின் அமைச்சர் - கஜேந்திர சிங் ஷேகாவட்

3. புகையிலை தடுப்பிற்காக 2019-ம் ஆண்டின் உலக சுகாதார அமைப்பின் விருதை பெற்ற அமைப்பு எது?

**விடை:** ராஜஸ்தான் மாநில சுகாதார பிரிவு

**விளக்கம்**

- புகையிலை தடுப்பிற்காக உலக சுகாதார அமைப்பின் விருதை ராஜஸ்தான் மாநில சுகாதார பிரிவு பெற்றுள்ளது.
    - மே 31-ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் புகையிலை தடுப்பு தினமாக உலக சுகாதார நிறுவனம் கடைபிடிக்கிறது.

4. இந்தியாவின் முதல் பெண் போர் விமானி யார்?

**விடை:** மோகனா சிங்

**விளக்கம்**

- இந்தியாவின் முதல் பெண் போர் விமானி மோகனா சிங்.

   - இந்திய விமானப் படையின் அதிநவீன போர் விமானத்தை தனியே இயக்கி, இந்திய விமானப்படையின் முதல் பெண் போர் விமானி என்ற பெருமையை பெற்றுள்ளார்.

5. எந்த மாநில அரசு, பேருந்து மற்றும் மெட்ரோ ரயில்களில் இலவசமாக பயணம் செய்யலாம் என அறிவித்துள்ளது?

**விடை** : டெல்லி

**விளக்கம்**

- டெல்லி மெட்ரோ ரயில், அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணம் செய்யலாம் என முதல்வர் அரவிந் கெஜ்ரிவால் அறிவிப்பு.

6. பெண்களுக்கு எல்.கே.ஜி முதல் பி.எச்டி வரை இலவச கல்வியை அறிமுகம் செய்துள்ள மாநிலம் எது?

**விடை**: பஞ்சாப்

**விளக்கம்**

- எல்.கே ஜி முதல் பி.எச்டி வரை பஞ்சாப் பெண்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படும் என்று பஞ்சாப் முதல்வர் அம்ரிந்தர் சிந் அறிவித்துள்ளார்.
   - பஞ்சாபில் கல்வி அறிவு பெற்ற பெண்கள் விழுக்காடு = 70.70%

7. விவசாயிகளுக்கு நிதியுதவி அளித்திட மத்திய அரசு தொடங்கியுள்ள திட்டம் என்ன?

**விடை** : பிஎம்-கிசான் (PM – KISAN)

**விளக்கம்**

- அனைத்து விவசாயிகளுக்கும் நிதியுதவி அளிக்கும் அறிக்கையை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
   - பிரதமர் விவசாயிகள் நிதியுதவி திட்டத்தை (பிஎம் - கிசான்) விரிவுபடுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
   - பிஎம் - கிசான் திட்டத்தின் மூலம் 14.5 கோடி விவசாயிகள் பயன்பெறுவர்.

8. இந்தியா – மாலத்தீவு இடையே எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டன?

**விடை** : 6

**விளக்கம்**

- இந்தியா – மாலத்தீவுகள் இடையே 6 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.
    - நீர் நிலைகள், சுகாதாரம், கடல் சார்ந்த சரக்கு போக்குவரத்து, சுங்கத்துறை, குடிமைப்பணி பாதுகாப்பு என 6 துறைகளில் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டது.
    - மாலத்தீவு சுற்றுலா துறையை மேம்படுத்தும் வகையில் மாலத்தீவுகள் “ரூபே” (RUPAY) அட்டையை அறிமுகப்படுத்தினார் மோடி.

9. 2019-ம் ஆண்டு பிரதமர் மோடி பங்கேற்கும் சர்வதேச யோகா தின விழா எங்கு நடைபெற இருக்கிறது?

**விடை** : ராஞ்சி (ஜார்க்கண்ட்)

**விளக்கம்**

- ஜுன் 21-ல் சர்வதேச யோகா தின விழா முக்கிய நிகழ்ச்சியை ராஞ்சியில் நடத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
    - பிரதமர் மோடி பங்கேற்பு.
    - மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறது.

10. ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு எங்கு நடைபெறுகிறது?

**விடை** : பிஸ்கெக் (கிர்கிஸ்தான்)

**விளக்கம்**

- ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் மோடி –ஜின்பிங் சந்திப்பு உறுதியானது.
    - நடைபெறும் இடம் - பிஸ்கெக் (கிர்கிஸ்தான்)
    - சீனாவுக்கான இந்திய தூதர் - விக்ரம் மிஸ்ரி
    - ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின் தலைமையிடம் - பெய்ஜீங்

11. உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது என்ன?

**விடை** : 65 வயது

**விளக்கம்**

- உச்சநீதிமன்றத்தின் அடுத்த 8 ஆண்டுகளில் 8 தலைமை நீதிபதிகள் பொறுப்பேற்க இருக்கின்றனர்.
    - தற்போதைய தலைமை நீதிபதி – ரஞ்சன் கோகாய்.

- அடுத்த தலைமை நீதிபதி - எஸ்.ஏ.போப்டே
- **TNPSC துளிகள்:** உச்சநீதி மன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயது – 65 வயது

12. இதர பிற்படுத்தப்பட்டோருக்கான (OBC) இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ள மாநில அரசு எது?

**விடை:** மத்தியப் பிரதேசம்

**விளக்கம்**

- மத்தியப் பிரதேச அரசு இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டை 14 சதவீதத்திலிருந்து 27 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இதற்கான தீர்மானம், அமைச்சரவை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீமானம் அமல்படுத்தப்பட்டால் இந்தியாவில் இதர பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு வழங்கிய முதல் மாநிலமாக மத்தியப்பிரதேசம் மாறும்.

13. விலங்குகளை சட்டமுறை நபர்களாக அண்மையில் உத்தரவிட்டுள்ள உயர்நீதிமன்றம் எது?

**விடை:** பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம்

**விளக்கம்**

- ஹரியானாவில் வாழும் மனிதர்களைப் போன்று அங்கு வாழும் அனைத்து விலங்குகளும் சட்டப்பூர்வ உரிமைகள் பெற்ற சட்டமுறை நபர்கள் என சமீபத்தில் பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. விலங்குகளின் நலன்களைப் பாதுகாப்பதற்காக உத்தரகாண்ட் உயர்நீதிமன்றம் இதுபோன்ற தீர்ப்பை வழங்கி கிட்டத்தட்ட ஓராண்டுக்குப் பிறகு இந்த தீர்ப்பு வந்துள்ளது.
    - உத்தரகாண்டிலிருந்து சண்டிகரில் உள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா நீதிமன்றத்திலிருந்து 2018 ஆம் ஆண்டில் பணிமாறுதல் பெற்ற நீதிபதி சர்மாவால், இவ்விரு தீர்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளது.

14. இந்தியாவின் முதல் டைனோசர் பூங்கா எங்குள்ளது?

**விடை:** குஜராத்

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டு ஜீன் 8 ஆம் தேதி குஜராத் முதலமைச்சர் விஜய் ரூபனி மகோசாகர் மாவட்டத்தின் பாலசினூரில் உள்ள ரெயியோலி கிராமத்தில் புதிய டைனோசர் அருங்காட்சியகம் மற்றும் பூங்காவை திறந்து வைத்தார்.
  - இது நாட்டின் முதல் டைனோசர் பூங்காவாகவும் உலகின் மூன்றாவது டைனோசர் பூங்காவாகவும் திகழ்கிறது.

15. நிதி ஆயோக்கின் துணை தலைவர் யார்?

**விடை**: ராஜீவ் குமார்

**விளக்கம்**

- இந்தியாவை வரும் 2024-ம் ஆண்டுக்குள் ரூ.350 லட்சம் கோடி பொருளாதார சக்தியாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என நிதி ஆயோக் கூட்டத்தில் பிரதமர் மோடி அறிவித்தார்.
  - 5வது நிதி ஆயோக் கூட்டம் டில்லியில் நடைபெற்றது.
  - தலைமை - பிரதமர் மோடி
  - நிதி ஆயோக் துணை தலைவர் - ராஜீவ் குமார்

16. சிஜசிஏ (CICA) உச்சி மாநாட்டில் இந்தியாவின் சார்பாக கலந்து கொண்டவர் யார்?

**விடை** : ஜெய்சங்கர் (வெளியுறவுத் துறை அமைச்சர்)

**விளக்கம்**

- சிஜசிஏ (CICA) உச்சி மாநாடு தஜிகிஸ்தானில் நடைபெற்றது.
  - இந்தியாவின் சார்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.
  - ஆசிய தொடர்பு மற்றும் நம்பிக்கையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பாகும்.
  - இந்த அமைப்பு 1999-ம் ஆண்டு அமைக்கப்பட்டது.
  - தலைமையிடம் - தஜிகிஸ்தான்

17. 20-வது கார்கில் விஜய் திவாஸ் நிகழ்வின் Theme என்ன?

**விடை** : Remember Rejoice and Renew

**விளக்கம்**

- 20வது கார்கில் விஜய் திவாஸ் ஜுன் 25 முதல் 27 வரை கொண்டாடப்படவுள்ளது.
    - கார்கில் போர் வெற்றியை கொண்டாடும் விதமாக கடைபிடிக்கப்படுகிறது.
    - Theme: "Remember Rejoice and Renew"

18. 17-வது மக்களவையின் இடைக்கால தலைவர் யார்?

**விடை:** வீரேந்திர குமார்

**விளக்கம்**

- 17-வது மக்களவையின் முதல் கூட்டத் தொடர் இன்று (17.6.19) தொடங்குகிறது.
    - மக்களவை இடைக்காலத் தலைவராக வீரேந்திர குமாரை குடியரசு தலைவர் பதவி பிரமானம் செய்து வைக்கிறார்.
    - வீரேந்திர குமார் 542 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதவி பிரமானம் செய்து வைப்பார்.

19. இந்தியாவில் எப்போது முதல் முறையாக வானிலை ஆய்வு மையம் அமைக்கப்பட்டது?

**விடை** : 1792(சென்னை)

**விளக்கம்**

- சென்னை வானிலை ஆய்வு மையத்துக்கு உலக அளவிலான அங்கீகாரத்தை உலக வானிலை ஆய்வு நிறுவனம் வழங்கியுள்ளது.
    - இந்தியாவில் முதல் முறையாக 1792-ம் ஆண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் வானிலை ஆய்வு மையம் அமைக்கப்பட்டது.
    - சுமார் 140 ஆண்டுகளாக சென்னை வானிலை ஆய்வு மையம் தரவுகளை வழங்கி கொண்டு வருகிறது.

20. மத்திய அரசு 10% இட ஒதுக்கீட்டை பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு வழங்க எந்த அரசியலமைப்புச் சட்டவிதிகளில் திருத்தம் மேற்கொண்டது?

**விடை** : விதிகள் 15 மற்றும் 16

**விளக்கம்**

- பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு 10% இட ஒதுக்கீட்டை கோவா மாநில அரசு நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

- ○ பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் கல்வியில் 10% இட ஒதுக்கீடு வழங்க அரசமைப்புச் சட்டவிதிகள் 15 மற்றும் 16ல் திருத்தம் செய்து மத்திய அரசு வழங்கியது.
- ○ இதுவரை தமிழகம், ராஜஸ்தான், பீகார் உள்ளிட்ட மாநிலங்களிலும் இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது.

21. பிரதமரின் விவசாயிகள் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் பெயர் என்ன?

**விடை:** கிசான் திட்டம்

**விளக்கம்**

- பிரதமரின் விவசாய உதவித்தொகைத் திட்டத்தில் 14.50 கோடி விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர்.
    - ○ பிரதமரின் விவசாயிகள் உதவித்தொகை வழங்கும் கிசான் திட்டம் பிப்ரவரி 1-ம் தேதி அமலுக்கு வந்தது.
    - ○ விவசாயிகளுக்கு ரூ.6000 மூன்று தவணையாக இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

22. எந்த மாநில அரசு அரசாணையை சமஸ்கிருத மொழியில் வெளியிட முடிவு செய்துள்ளது?

**விடை**: உத்திரப்பிரதேசம்

**விளக்கம்**

- உத்திரப் பிரதேச அரசாங்கமானது அம்மாநிலத்தின் அரசாணையை இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளுடன் சேர்த்து சமஸ்கிருத மொழியில் வெளியிட முடிவு செய்துள்ளது.
    - ○ சமஸ்கிருதம் உத்திரகாண்ட் மாநிலத்தின் ஆட்சிமொழியாகவும் உள்ளது.

23. பாலகோட் தாக்குதலுக்கு இந்திய விமானப்படை என்ன பெயரிட்டுள்ளது?

**விடை**: “பந்தர் நடவடிக்கை”

**விளக்கம்**

- பாலகோட் தாக்குதலானது இந்தியவிமானப் படையால் “பந்தர் நடவடிக்கை”என பெயரிடப்பட்டுள்ளது.
    - ○ புல்வாமா தாக்குதல் நிகழ்விற்கு பதிலடி கொடுக்க இந்திய விமானப்படை பாலகோட்டில் தாக்குதல் நடத்தியது.

- ○ மிராஜ் 2000 ரகபோர் விமானங்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியது.

## உலக நிகழ்வுகள்

1. கொழும்பில் உள்ள கிழக்கிந்திய சரக்கு முனையத்தை விரிவடைய செய்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள் எவை?

**விடை** : இந்தியா, ஸ்ரீலங்கா மற்றும் ஜப்பான்

**விளக்கம்**

- இந்தியா, ஸ்ரீலங்கா மற்றும் ஜப்பான் இடையிலான கொழும்பில் உள்ள கிழக்கிந்திய சரக்கு முனையத்தை இணைத்து விரிவடைய செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

2. இந்தியாவுக்கு அளித்து வந்த வர்த்தக முன்னுரிமை நாடுகள் என்ற அந்தஸ்த்தை ரத்து செய்தது யார்?

**விடை** : அமெரிக்க அதிபர் டிரம்ப்

**விளக்கம்**

- இந்தியாவுக்கு அளித்து வந்த வர்த்தக முன்னுரிமை நாடுகள் என்ற அந்தஸ்த்தை அமெரிக்க அதிபர் டிரம்ப் ரத்து செய்துள்ளார்.
    - ○ இதனால் இந்தியாவுக்கு அளிக்கப்பட்டு வந்த 560 கோடி டாலர் மதிப்பிலான வர்த்தக சலுகைகள் ரத்தாகும் என்று கூறப்படுகிறது.

3. 2020, அக்டோபரில் யூதப்-பகைமைக்கு எதிராக ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தவுள்ள நாடு எது?

**விடை** : சுவீடன்

**விளக்கம்**

- யூதப்படுகொலையின் நினைவாக 2020 அக்டோபரில் யூதப்பகைமைக்கு எதிரான ஒரு சர்வதேச மாநாட்டை சுவீடன் நடத்தவுள்ளது. மால்மோவில் நடைபெறவுள்ள இந்த மாநாடு, இரண்டு குறிப்பிடத்தக்க தேதிகளுடன் ஒத்திசைந்து வருகிறது.
    - ○ யூதப்-பகைமை (Anti – Semitism) என்பது யூதர்களுக்கு எதிரான பகைமைப் போக்கு பாரபட்சம் அல்லது பாகுபாடு ஆகும்

4. 2019ஆம் ஆண்டு G-20 உச்சிமாநாடு எங்கு நடக்கவுள்ளது?

**விடை** : ஒசாகா, ஜப்பான்

**விளக்கம்**

- நிதி அமைச்சரான நிர்மலா சீதாராமன் ஜப்பானில் நடக்கவிருக்கும் ஜி-20 நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கிகளின் ஆளுநர்களின் இரு நாள் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளார்.
    - இது 2019 ஆம் ஆண்டு, 28-29 ஜுன் மாதம் ஒசாகாவில் நடக்கவுள்ளது.
    - சவூதி அரேபியா, 2020 நவம்பரில் G-20 உச்சிமாநாட்டை நடத்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

5. ஐக்கிய அமெரிக்காவின் நாணயக் கண்காணிப்புப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ள நாடு எது?

**விடை** : இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்து

**விளக்கம்**

- டிரம்ப் நிர்வாகம் அண்மையில் இந்தியா மற்றும் சுவிட்சர்லாந்தை அதன் முதன்மை வர்த்தகப் பங்காளிகளின் நாணயக் கண்காணிப்புப் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது. நாணயக் கண்காணிப்புக் குழுவில் நீட்டிக்கத் தேவையான 3 முக்கிய அம்சங்களுள் ஒன்றனை மட்டுமே பெற்றுள்ள காரணத்தால் இரண்டு நாடுகளையும் நீக்கியதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

6. ஆளில்லா போர் விமானங்களை விற்பனை செய்வதற்கு தொடர்பான ஒப்பந்தம் யாருக்கு இடையில் நடந்தது?

**விடை** : அமெரிக்க அதிபர் டிரம்ப் மற்றும் மோடி

**விளக்கம்**

- இந்தியாவுக்கு ஆளில்லா போர் விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.
    - பாதுகாப்பு தடவாளங்கள் தொடர்பான அதிநவீன தொழில் நுட்பங்களையும் இந்தியாவுக்கு வழங்க விருப்பம்.
    - கடந்த 2017-ம் ஆண்டு, இது தொடர்பான ஒப்பந்தம் அமெரிக்க அதிபா் டிரம்ப் மற்றும் மோடிக்கு இடையில் கையெழுத்தானது.

7. SPICE குண்டுகளுக்காக எந்த நாட்டுடன் இந்தியா ஒப்பந்தம் செய்துள்ளது?

**விடை:** இஸ்ரேல்

**விளக்கம்**

- இந்திய விமானப்படை 100க்கும் மேற்பட்ட ஸ்பைஸ் (SPICE) குண்டுகளை வாங்குவதற்காக இஸ்ரேல் அரசாங்கத்துடன் ரூ.300 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.
    - ஸ்பைஸ் என்பது திறன் வாய்ந்த துல்லியமான தாக்கம் கொண்ட செலவு குறைந்த குண்டு என்பதன் விரிவாக்கம் ஆகும்.
    - SPICE: Smart, Precise Impact and Cost- Effective
    - இதன் வரம்பு 60 கிலோ மீட்டர் ஆகும்.
    - இது வானிலிருந்து நிலத்தை நோக்கிப் பாயும் நடவடிக்கையில் பயன்படுத்தப்படும் ஆயுதங்களில் பொருத்தப்பட்டுள்ளது.

8. வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மீதான G- 20 அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு எங்கு நடத்தப்பட்டது?

**விடை :** ஃப்யூகூவோகா

**விளக்கம்**

- வர்த்தகம் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் மீதான G- 20 அமைச்சரவை மட்டத்திலான சந்திப்பு ஜப்பானிய நகரான ஃப்யூகூவோகாவில் (Fukuoka) நடத்தப்பட்டது.
    - G- 20 ல் முதலாவது சுழல் முறையிலான தலைவர் பதவியை ஜப்பான் ஏற்றது.
    - G- 20 ன் தற்போதைய தலைவர் சின்கோ அபே ஆவார்.
    - இந்தச் சந்திப்பின் போது டிஜிட்டல் மயமாக்கத்தின் முக்கியத்துவம் குறித்தும், அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கத் தன்மை மற்றும் மனிதனை மையமாகக் கொண்ட எதிர்கால சமுதாயமான சமூகம் 5.0 ஆகியவற்றை அடைய அது எவ்வாறு உதவும் என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.
    - G- 20 (20 நாடுகள் கொண்ட ஒரு குழு) என்பது 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றைச் சேர்ந்த அரசாங்கங்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களுக்கான ஒரு சர்வதேச மன்றமாகும்.
    - இது 1999 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

9. 2019 ஆம் ஆண்டு 2வது உலக மாற்றுதிறனாளிகள் சந்திப்பு எங்கு நடத்தப்பட்டது?

**விடை:** அர்ஜென்டினா

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டு ஜூன் 06 முதல் ஜூன் 08 வரை அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்ஸில் 2-வது உலக மாற்றுத் திறனாளிகள் சந்திப்பு (Global Disability Summit) நடத்தப்பட்டது.
    - இந்தியாவின் சார்பாக மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளிப்புத் துறை அமைச்சரான தல்வார்சந்த் கெலாட் தலைமையிலான குழு பங்கேற்றிருக்கின்றது.
    - இந்தச் சந்திப்பு மாற்றுத் திறனாளி நபர்கள் சுதந்திரமான மற்றும் கௌரவமான வாழ்க்கையை வாழ்வதற்க்கு வழிமுறையை உருவாக்க முயற்சிக்கின்றது.

10. முதன்முறையாக சீனா ஏவிய, கடலிலிருந்து தாக்கக்கூடிய ஏவுகணையின் பெயர் என்ன?

**விடை:** லாங் மார்ச் 11

**விளக்கம்**

- முதன்முறையாக சன்டோங் மாகாணத்தின் மஞ்சள் கடலில் நகரக்கூடிய ஏவு தளத்திலிருந்து “லாங் மார்ச் 11” என்ற ஒரு ஏவு வாகனத்தை சீனா ஏவியுள்ளது.
    - ஒரு மிதக்கும் தளத்திலிருந்து சுற்றுவட்டப் பாதைக்கு செயற்கைக் கோள்களை செலுத்தும் திறனை இதுவரை அமெரிக்கா மற்றும் இரஷ்யா ஆகிய நாடுகள் வெற்றிகரமாக பரிசோதனை செய்துள்ளன.

11. NDMA (National Disaster Management Authority) –யின் தலைவர் யார்?

**விடை** : பிரதமர்

**விளக்கம்**

- NDMA, குஜராத்தின் காண்டலாவில் உள்ள டீன் தயால் போர்ட் டிரஸ்டில் ஒரு அடிப்படை பயிற்சித் திட்டத்தை நடத்தி வருகிறது. இது CBRN (Chemical, Biological, Radiological and Nuclear – வேதியியல், உயிரியல், கதிரியக்க

மற்றும் அணுசக்தி) அச்சுறுத்தல் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் துறைமுக அவசர கையாளர்களை (SEHs) தயார்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டது.

- NDMA (National Disaster Management Authority) –யின் தலைவர் பிரதமர் ஆவார்.

12. 2019ல் அதிக வருமானம் ஈட்டும் முதல் 100 விளையாட்டு வீரர்களின் பட்டியலில் இடம்பெற்ற ஒரே இந்தியர் யார்?

**விடை** : விராட்கோலி

**விளக்கம்**

- 2019-ல் அதிக வருமானம் ஈட்டும் முதல் 100 விளையாட்டு வீரர்களின் பட்டியலை அமெரிக்காவின் ∴போர்ப்ஸ் பத்திரிக்கை வெளியிட்டது.
  - இதில் அர்ஜெண்டினா கால்பந்து அணியின் பிரபல நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி முதலிடம் பிடித்தார்.
  - போர்ச்சுக்கல் அணியைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ 2ஆம் இடம் பெற்றார்.
  - டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் இந்த 100 பேர் பட்டியலில் இடம்பிடித்த ஒரே பெண் ஆவார். அவர் 29.2 மில்லியன் அமெரிக்க டாலர்களுடன் 63-வது இடத்தில் உள்ளார்.
  - இந்நிலையில் இந்திய கிரிக்கெட் அணியின் கேப்டன் விராட் கோலி, அதிக வருமானம் ஈட்டும் விளையாட்டு வீரர்களில் ஒரே இந்தியராக திகழ்கிறார். 25 மில்லியன் அமெரிக்க டாலர்களுடன் கடைசி இடமான 100-ஆவது இடத்தைப் பிடித்தார்.

13. குஜராத்தில் கடல்சார் அருங்காட்சியகம் அமைப்பதற்கு எந்த நாட்டுடன் இந்தியா ஒப்பந்தமிட்டுள்ளது?

**விடை** : போர்ச்சுக்கல்

**விளக்கம்**

- குஜராத்தில் உள்ள லோதாலில் உள்ள பண்டைய ஹரப்பான் நாகரிகத்திற்கு அருகில் கடல்சார் அருங்காட்சியகம் அமைப்பதற்கு போர்ச்சுக்கலுடன் இந்தியா ஒப்பந்தமிட்டுள்ளது.

- ○ போர்ச்சுக்கீசிய கடற்படையால் நிர்வகிக்கப்படும் போர்ச்சுக்கல்லின் லிஸ்பன் அருங்காட்சியகத்தை மாதிரியாக கொண்டு இது அமையவுள்ளது என்பது குறிப்பிடதக்கது.

14. 2018 டாம் டாம் போக்குவரத்து அட்டவணையின்படி, உலகின் மிகவும் நெரிசலான நகரம் எது?

**விடை** : மும்பை

**விளக்கம்**

- டாம் டாம் என்ற நிறுவனம் 'Traffic Index – 2108' என்ற தலைப்பில் நடத்திய ஆய்வில், நெரிசல் அளவு 65 சதவீதத்துடன் மும்பை நகரம் முதலிடத்தில் உள்ளது. புது தில்லி 4ஆவது (58%) இடத்தை பிடித்துள்ளது.
    - ○ கொலம்பியா தலைநகர் போகோடா (63%) 2ஆவது இடத்திலும், பெரு தலைநகர் லிமா (58%) 3ஆவது இடத்திலும், ரஷ்ய தலைநகர் மாஸ்கோ (56%) 5ஆவது இடத்திலும் உள்ளது.

15. இந்திய ரயில்வே நிலைய மேம்பாட்டுக் கழகம் (IRSDC) இந்தியாவில் ரயில்வே நிலையம் மேம்பாட்டு திட்டத்தை ஆதரிப்பதற்காக எதனுடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது?

**விடை** : பிரெஞ்சு தேசிய இரயில்வே (SNCF) & AFD என்ற பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனம்

**விளக்கம்**

- இந்திய ரயில்வே நிலைய மேம்பாட்டுக் கழகம் (IRSDC) இந்தியாவில் ரயில்வே நிலையம் மேம்பாட்டு திட்டத்தை ஆதரிப்பதற்காக பிரெஞ்சு தேசிய இரயில்வே (SNCF) & AFD என்ற பிரெஞ்சு மேம்பாட்டு நிறுவனத்துடன் முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

16. அண்மையில் எந்த நாட்டில் "அமைதிக்கான காந்தி சைக்கிள் பேரணி" நடத்தப்பட்டது?

**விடை** : சவுதி அரேபியா

**விளக்கம்**

- சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரகம், மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த நாளை நினைவு கூறும் விதமாக ரியாத்தில் ''அமைதிக்கான காந்தி சைக்கிள் பேரணி''யை நடத்தியது. இச்சைக்கிள் பேரணியானது Diplomatic Quarter Authority உடனும், சவுதி சைக்கிளிங் கூட்டமைப்புடனும் இணைந்து நடத்தப்பட்டது.

17. இஸ்ரேலிய கிராமத்துக்கு எந்த தலைவரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது?

**விடை:** அமெரிக்க அதிபர் டிரம்ப்

**விளக்கம்**

- இஸ்ரேலிய கிராமத்துக்கு ''டிரம்ப்'' பெயர் வைக்கப்பட்டுள்ளது.
    - இஸ்ரேல் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ''கோலன் ஹைட்ஸ்'' என்ற யூதர்கள் குடியிருக்கும் குக்கிராமத்தின் பெயர் ''ரமத் டிரம்'' என பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
    - இஸ்ரேல் பிரதமர் - பெஞ்சமின் நெதன்யாகு.

18. எந்த நாட்டில், குவாதலஜாரா சர்வதேச புத்தகக் கண்காட்சியை (Guadalajara International Book Fair) நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது?

**விடை:** மெக்ஸிகோ

**விளக்கம்**

- நவம்பர் 30 முதல் டிசம்பர் 8 வரை மெக்ஸிகோவில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ள 33-ஆவது குவாதலஜாரா சர்வதேச புத்தகக் கண்காட்சியில் இந்தியா, கௌரவ விருந்தினராக (Guest of Honour) நியமிக்கப்பட்டுள்ளது. ஸ்பானிய மொழி பேசும் உலகின், மிகப்பெரிய புத்தகக் கண்காட்சியாக இந்தக் கண்காட்சி இருக்கும்.

19. UNCCDயின் 14-வது மாநாடு எங்கு நடக்கவுள்ளது?

**விடை:** இந்தியா

**விளக்கம்**

- நிலச் சீரழிவு மற்றும் பாலைவனமாக்கல் பிரச்சனைக்கு தீர்வு காண 2019 செப்டம்பரில் ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனமாக்கலுக்கான மாநாட்டின்

(United Nations Convention to Combat Desertification – UNCCD) 14வது அமர்வை (COP- 14) இந்தியா முதன் முறையாக நடத்தவுள்ளது.

20. 2021 ஆம் ஆண்டு முதல் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழியை தடை செய்ய முடிவு செய்துள்ள வட அமெரிக்க நாடு எது?

**விடை:** கனடா

**விளக்கம்**

- 2021 ஆம் ஆண்டிலிருந்து தீங்கு விளைவிக்கும் ஒற்றைப் பயன்பாடுடைய நெகிழிப் பொருட்கள் தடை செய்யப்படும் எனக் கனட பிரதமர் ஜஸ்டின் ட்ரூட்டோ அண்மையில் அறிவித்துள்ளார். பெருங்கடலில் கலக்கும் கழிவுகளின் அளவுகளை குறைப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உலகில் உள்ள பெருங்கடல்களை நிரப்பியிருக்கும் நெகிழிப்பைகள், உறிஞ்சுக் குழல்கள் மற்றும் வெட்டுக்கருவிகளை நீக்குவதற்கான ஓர் உலகளாவிய சவாலாக அவர் இதனை அறிவித்துள்ளார்.
    - கனடா, பிரான்சு, ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் இத்தாலி ஆகியவை ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து கியூபெக்கில் நடந்த 2018 G7 உச்சிமாநாட்டில் பெருங்கடல்களில் ஏற்பட்டுள்ள மாசுக்கு எதிரான ஒரு புதிய சாசனத்தில் கையெழுத்திட்டன.

21. நைஜரின் தலைநகரம் எது?

**விடை:** நியாமி (Niamey)

**விளக்கம்**

- 7- 8 ஜீலை 2019 இல் நைஜரின் தலைநகரமான நியாமியில் நடைபெறவிருக்கும் ஆப்பிரிக்க யூனியன் (AU) உச்சி மாநாட்டை ஏற்பாடு செய்வதற்கு ஆதரவாக இந்தியா முதன்முறையாக நைஜருக்கு 15 மில்லியன் டாலர் நிதி உதவியை வழங்கியுள்ளது
    - நைஜர் AU உச்சிமாநாட்டை நடத்துவது இதுவே முதல் முறையாகும்.

22. புதிய பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்கள் விற்பனைக்கு தடை விதிக்க முடிவு செய்துள்ள நாடு எது?

**விடை:** அயர்லாந்து

**விளக்கம்**

- கிரீன்ஹவுஸ் வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்காக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையின் ஒரு பகுதியாக 2030க்குள் புதிய பெட்ரோல் மற்றும் டீசல் வாகனங்கள் விற்பனைக்கு தடை விதிக்க அயர்லாந்து அரசு முடிவு செய்தது.
    - காலநிலை செயல் திட்டத்தில் வெளியிடப்பட்ட ஐரிஷ் அரசாங்கத்தின் 180 நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

23. “AWaRe” என்பதன் விரிவாக்கம் என்ன?

**விடை**: Access, Watch and Reserve

**விளக்கம்**

- உலக சுகாதார நிறுவனம் (WHO) “AdoptAWaRe, நுண்ணுயிர் எதிர்ப்புகளை கவனமாகக் கையாளுங்கள்” என்ற உலகளாவிய பிரச்சாரத்தைத் தொடங்கியது.
    - இதில் WHO ஆண்டிமைக்ரோபையல் பரவுவதைக் குறைக்க “AWaRe” (அணுகல், கண்காணிப்பு மற்றும் இருப்பு- Access, watch, and Reserve) என்ற முறையை பயன்படுத்துமாறு அரசாங்கங்களை வலியுறுத்தியுள்ளது

24. சிப்ரி ஆண்டறிக்கையின் சிறப்பம்சங்களை வெளியிட்டுள்ள நிறுவனம் எது?

**விடை**: ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute –SIPRI)

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டில் சிப்ரி ஆண்டறிக்கையின் சிறப்பம்சங்களை ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (Stockholm International Peace Research Institute-SIPRI) வெளியிட்டுள்ளது.
    - இது போர்க் கருவிகள், ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேசப் பாதுகாப்பு ஆகியவற்றை மதிப்பிடுகின்றது.
    - 2019 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா, இரஷ்யா, ஐக்கிய இராஜ்ஜியம், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் மற்றும் வடகொரியா ஆகிய நாடுகள் 13,865 அணுஆயுதங்களைக் கொண்டிருந்தன.

25. கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் தற்போதைய தலைவராக உள்ள நாடு எது?

**விடை:** இந்தியா

**விளக்கம்**

- கிம்பர்லி செயல்முறை சான்றளிப்புத் திட்டத்தின் (Kimberley Process Certification Scheme- KPCS) நிறுவன உறுப்பினர்களுள் ஒன்றான இந்தியா கிம்பர்லிசெயல் முறையின் 2019 ஆம் ஆண்டுக்கான தலைவராக உள்ளது. இரஷ்ய கூட்டமைப்பு, அதன் துணைத்தலைவராக உள்ளது. ஜூன் 17- 21 வரை கிம்பர்லி செயல்முறையின் கூட்டத்தொடர் சந்திப்பு இந்தியா, மும்பையில் நடைபெற்றது.

26. மெல்போர்னின் (IFFM- 2019) 10 ஆவது இந்திய திரைப்படவிழாவில் முதன்மை விருந்தினராக பங்கேற்கவுள்ள இந்திய நடிகர் யார்?

**விடை:** ஷாருக்கான்

**விளக்கம்**

- வரும் ஆகஸ்ட் மாதம் 8-17 வரை நடைபெறவுள்ள மெல்போர்னின் (IFFM- 2019) 10 ஆவது இந்திய திரைப்பட விழாவில் ஹிந்தி நடிகர் ஷாருக்கான் முதன்மை விருந்தினராக பங்கேற்கவுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இந்த விழாவில், முன்னணி திரைப்பிரபலங்களுள் ஒருவர் ஆஸ்திரேலியாவுக்குச் சென்று இவ்விழாவிற்கு தலைமை தாங்குவார்.

27. ஆப்கன் அமைதி மாநாடு எங்கு நடைபெறுகிறது?

**விடை** : இஸ்லாமாபாத்

**விளக்கம்**

- ஆப்கன் அமைதி மாநாடு பாகிஸ்தானில் தொடங்கியது.
    - மாநாடு நடைபெறும் இடம் இஸ்லாமாபாத்
    - நோக்கம் = ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவதற்காக நடைபெறுகிறது.

28. இந்தியாவின் 83% கச்சா எண்ணெய் எந்த கடல் வழிதடத்தில் நடைபெறுகிறது?

**விடை** :ஈரான்-ஐக்கிய அரபு அமீரகம்

**விளக்கம்**

- ஈரான் மீது கடுமையான பொருளாதார தடையை விதித்தது அமெரிக்கா.
    - ஈரான்-ஐக்கிய அரபு அமீரகம் இடையேயான கடல்பாதை சர்வதேச கச்சா எண்ணெய் போக்குவரத்து மிக முக்கியமானது.
    - இந்தியாவின் கச்சா எண்ணெய் தேவையில் 83% இந்த வழியாகத்தான் நடைபெறுகிறது.
    - இந்த நடவடிக்கையால் இந்திய பொருளாதார சமூகநலத் திட்ட நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தும்.

29. UNICEF இன் டேனி கே மனிதாபிமான விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ள இந்தியர் யார்?

**விடை:** பிரியங்கா சோப்ரா

**விளக்கம்**

- UNICEF அமைப்பின் குழந்தைகள் உரிமைக்கான நல்லெண்ணத் தூதராக இருந்து வரும் இந்திய நடிகை பிரியங்கா சோப்ராவுக்கு, வரும் டிச.3 அன்று நியூயார்க்கில் நடைபெறவுள்ள விருது வழங்கும் விழாவில், டேனி கே மனிதாபிமான விருது (Danny Kaye Humanitarian Award) வழங்கப்படவுள்ளது. சமுதாயம் சார்ந்த பங்களிப்பாளராகவும், குழந்தைகளின் கல்விக்காக குரல் கொடுப்பவராகவும் பிரியங்கா அறியப்படுகிறார்.
    - ஐக்கிய நாடுகளின் சர்வதேச Girl Up பரப்புரையின் ஒருபகுதியாக இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.
    - UNICEF ஐன் முதல் நல்லெண்ண தூதராக இருந்த நடிகர் – கொடையாளி டேனி கேயின் பெயரால், இந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.

30. இந்தியப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது எது?

**விடை:** இந்தியத் தொழில்நுட்ப நிறுவனம், மும்பை

**விளக்கம்**

- சமீபத்திய QS உலக பல்கலைக்கழக தரவரிசைகளின் பட்டியலில் அமெரிக்காவில் உள்ள மாசாசுசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் முதலிடத்தில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

- இந்தியப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப் பட்டியலில் மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பநிறுவனம் முதலிடத்தில் உள்ளது.
- இந்தப் பட்டியலில் முதல் 500 இடங்களில் 9 இந்தியப் பல்கலைக் கழகங்கள் உள்ளன.

31. நியமிக்கப்ட்ட பெயர்கள் & எண்களுக்கான இணையதள குழுமத்தின் (Internet Corporation for Assigned Names and Numbers- ICANN) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

**விடை:** லாஸ் ஏஞ்சல்ஸ்

**விளக்கம்**

- நியமிக்கப்பட்ட பெயர்கள் & எண்களுக்கான உலகளாவிய இணைய அமைப்பும் (ICANN), இந்திய தகவல் தொழிநுட்பத்துறை அமைப்பான நாஸ்காமும் இணைந்து, இணையத்தைப் பயன்படுத்தி சாதனங்கள் மற்றும் உட்கட்டமைப்பை நிர்வகிக்கப் பயன்படும் அடையாளங்காட்டி தொழிநுட்பத்தை(Identifier Technology) உருவாக்கவுள்ளன.
    - இந்த இணைவின் கீழ்,தயாரிப்பாளர் அல்லது விநியோகஸ்தர்கள் தங்களது வணிகத்தை நிறுத்திய சூழலிலும்கூட, களப்பெயர் முறைமையைப் (DNS) பயன்படுத்தி இணைய உலகின் சாதனங்களைப் புதுப்பிப்பதில் இரு அமைப்புளும் கவனம் செலுத்துகின்றன.

32. பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு(International Civil Aviation Organization) கவுன்சிலில் இந்தியாவின் பிரதிநியாக நியமிக்கப்ட்டுள்ளவர் யார்?

**விடை:** ஷெபாலி ஜூனேஜா (ShefaliJuneja)

**விளக்கம்**

- கனடாவின் மாண்ட்ரியலில் உள்ள பன்னாட்டு குடிசார் வான்பயண அமைப்பு(ICAO) கவுன்சிலில், இந்தியாவின் பிரதிநிதியாக 1992 ஆம் ஆண்டு இந்தியவருவாய் சேவை(வருமானவரி பணிநிலை) அதிகாரி ஷெபாலி ஜூனேஜா நியமிக்கப்பட்டுள்ளார். இவரதுபணிக்காலம் 3 ஆண்டு காலமாகும். இவருக்குமுன், அலோக் சேகர் IAS, இப்பதவியில் இருந்தார்.

33. புதிய எரிசக்தி அவுட்லுக் அறிக்கை 2019- New Energy Outlook (NEO) report 2019 யாரால் வெளியிடப்பட்டுள்ளது?

**விடை:** ப்ளூம்பெர்க் NEF (BloombergNEF)

**விளக்கம்**

- ப்ளூம்பெர்க் NEF (BloombergNEF) வெளியிட்டுள்ள புதிய எரிசக்தி அவுட்லுக் அறிக்கை 2019 New Energy Outlook (NEO) report 2019 உலகெங்கிலும் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளில் காற்று மற்றும் சூரிய சக்தி புதிய சக்தியாகும். மேலும் அவை 2050க்குள் மின்சார அமைப்பில் கிட்டத்தட்ட பாதியை உருவாக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

34. ஜார்க்கண்டில் உள்ள நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின்(ULBs) மேலாண்மை திறனை மேம்படுத்த உதவும் நிறுவனம் எது?

**விடை:** உலக வங்கி

**விளக்கம்**

- மக்களுக்கு அடிப்படை நகர்ப்புற சேவைகளை வழங்குவதற்கும், ஜார்க்கண்டில் உள்ள நகர்ப்புற உள்ளட்சி அமைப்புகளின் (ULBs) மேலாண்மை திறனை மேம்படுத்த உதவுதற்கும், உலக வங்கி 147 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.

35. ஒசாகா உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?

**விடை** :'மனிதனை மையமாகக் கொண்ட எதிர்கால சமூகம்''Human centred Future Society'.

**விளக்கம்**

- ஜி 20 உச்சிமாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர் நரேந்திரமோடி ஜப்பானிய நகரமான ஒசாகாவை அடைந்தார்.
    - இந்தஉச்சிமாநாடு 2022 ஆம் ஆண்டு ஜி-20 உச்சிமாநாட்டை இந்தியா நடத்துவதற்கான ஒரு முக்கியமான படியாக இருக்கும். அப்போது சுதந்திரத்தின் 75 வது ஆண்டுவிழாவில் நாடு ஒரு புதிய தொடக்கத்தை ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

- ஒசாகா உச்சிமாநாட்டின் கருப்பொருள் ‘மனிதனை மையமாகக் கொண்ட எதிர்காலச் சமூகம்’. ‘Human centred Future Society’.

36. JL-3 நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து செலுத்தப்படும் ஏவுகணையை எந்த நாடு பரிசோதித்தது?

**விடை:** சீனா

**விளக்கம்**

- நீர்மூழ்கிக் கப்பலில் இருந்துச் செலுத்தப்படும் ஏவுகணை JL-3 – யை வெற்றிகரமாக சோதித்தது சீன அரசு.
  - இது நீர்மூழ்கி கப்பலில் இருந்து செலுத்தப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஆகும்.
  - இது போகாய் கடலிருந்து செலுத்தப்பட்டது.
  - JL-3 என்ற குறியீட்டு பெயர் கொண்ட இது, சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் மிகவும் ரகசியமான இராணுவ திட்டங்களில் ஒன்றாகும்.

## விருதுகள்

1. மெக்ஸிகோவின் உயரிய விருதினை பெற்ற முதல் இந்திய பெண் யார்?

**விடை** : பிரதீபா பாட்டில்

**விளக்கம்**

- முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதீபா பாட்டிலுக்கு மெக்ஸிகோவின் உயரிய விருது அளிக்கப்பட்டுள்ளது.
  - விருதின் பெயர் - “ஆர்டன் மெக்ஸிகனா டெல் அகுலா அஸ்டெகா”
  - இந்த விருதினை பெறும் முதல் இந்திய பெண் பிரதீபா பாட்டில் ஆவர்.
  - இதற்கு முன் இவ்விருதினை நெல்சன் மண்டேலா, 2-ம் எலிசபெத், சர்வப்பள்ளி ராதாகிருஷ்ணன், பில்கேட்ஸ் பெற்றுள்ளனர்.

2. உலக சுகாதார அமைப்பால் (WHO) 2019 ஆம் ஆண்டுக்கான புகையிலை கட்டுப்பாடு விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை** : ராஜஸ்தான் அரசாங்கத்தின் மருத்துவ மற்றும் சுகாதார துறை

**விளக்கம்**

- உலக சுகாதார அமைப்பு (WHO) ராஜஸ்தான் அரசாங்கத்தின் மருத்துவ மற்றும் சுகாதார துறைக்கு, புகையிலைக்கான கட்டுப்பாட்டில் ராஜஸ்தான் சாதனைகளை அங்கீகரித்து 2019 ஆம் ஆண்டுக்கான புகையிலை கட்டுப்பாடு விருது (Tabacco Control Award For year 2019) வழங்கப்பட்டுள்ளது.

3. Gglobal Leadership Awards 2019-ஐ பெற்றவர் யார்?

**விடை** : சுந்தர்பிச்சை மற்றும் அடேனா ∴ப்ரிட்மன்

**விளக்கம்**

- அமெரிக்காவின் தலைமை நிர்வாக அதிகாரி சுந்தர்பிச்சை மற்றும் நாஸ்டாக் ஜனாதிபதி அடேனா ∴ப்ரிட்மன் (Adena Friedman) ஆகியோர், உலகின் முன்னணி தொழில்நுட்ப உந்துதல் தளங்களில் இரண்டு நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிப்பதற்காக USIBCயின் வணிக ஆலோசகர் குழு மூலம் 2019ஆம் ஆண்டுக்காக உலகளாவிய தலைமைத்துவ விருதுக்கு (Global Leadership Awards 2019) தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

4. பிரதமர் மோடிக்கு மாலத்தீவு அரசால் வழங்கப்பட்ட உயரிய விருதின் பெயர் என்ன?

**விடை** : "ரூல் ஆ∴ப் நிஷான் இஸீத்தீன்"

**விளக்கம்**

- பிரதமர் மோடிக்கு மாலத்தீவின் பெரிய விருது வழங்கப்பட்டுள்ளது.
  - விருதின் பெயர் "ரூல் ஆ∴ப் நிஷான் இஸீத்தீன்" சிறப்பு மாலத்தீவுகளில் வெளிநாட்டுத் தலைவர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய கவுரவ விருதாகும்.
  - மாலத்தீவு அதிபர் இப்ராஹிம் முகமது சோலி இவ்விருதினை வழங்கினார்.

5. எமிரேட்ஸ் மறுசுழற்சி விருதுகளுக்கான 22வது பதிப்பில் கௌரவிக்கப்பட்ட இந்திய மாணவி யார்?

**விடை** : நியா டோனி

**விளக்கம்**

- சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுக்கும் வகையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 8 வயது சிறுமி 15 ஆயிரம் கிலோ காகிதக் கழிவுகளை சேகரித்துள்ளார்.
    - நியா டோனி என்ற அந்தச் சிறுமி சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் காகிதக் கழிவுகளை சேகரித்ததற்காக கௌரவிக்கப்பட்டார்.
    - ஐக்கிய அரபு அமீரகம் (UAE) துபாயில் உள்ள எமிரேட்ஸ் மறுசுழற்சி விருதுகளுக்கான 22வது பதிப்பில் நியா டோனி கௌரவிக்கப்பட்டார்.

6. 2019 புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசினை வென்றவர் (Women's Prize for Fiction) யார்?

**விடை** : தயாரி ஜோன்ஸ்

**விளக்கம்**

- அமெரிக்க எழுத்தாளரான தயாரி ஜோன்ஸ் "An American Marriage" என்னும் தனது புதினத்துக்காக நடப்பாண்டின் புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசை வென்றுள்ளார்.
    - £30,000 ரொக்கப் பரிசும், 'பெஸ்ஸி' என்னும் ஒரு வெண்கல சிலையும் வழங்கப்பட்டது. இந்தப் பரிசு, பெண்களின் படைப்பாற்றல்களை கொண்டாடும் மிகப்பெரிய சர்வதேச கொண்டாட்டங்களுள் ஒன்றாகும்.

7. 2018 ஆம் ஆண்டுக்கான ஞானபீட விருது யாருக்கு வழங்கப்பட்டது?

**விடை** : அமிதவ் கோஷ்

**விளக்கம்**

- இந்தியாவில் முன்னிலையில் உள்ள சமகால ஆங்கில எழுத்தாளர்களில் ஒருவரான அமிதவ் கோஷ் என்பவருக்கு 2018 ஆம் ஆண்டின் ஞானபீட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இலக்கியத்தில் அவருடைய தலைசிறந்தப் பங்களிப்பிற்காக இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - இவர் இதற்கு முன்பு "நிழல் வரிகள்" (1998) என்ற தன்னுடைய நாவலுக்காக சாகித்ய அகாதமி விருதைப் பெற்றுள்ளார்.
    - கண்ணாடி மாளிகை, பசி அலை, இபிஸ் என்ற மூன்று தொகுதியான "ஸீ ஆப் பாப்பீஸ்" ஆகியவை இவருடைய இதரப் படைப்புகளாகும்.

8. பால சாகித்ய புரஸ்கர் மற்றும் யுவ புரஸ்கர் விருது வென்றவர்கள் யார்?

**விடை** :

பால புரஸ்கர் - தேவி நாச்சியப்பன்

யுவ சாகித்ய புரஸ்கர் - சபரி நாதன்

**விளக்கம்**

- இலக்கிய அமைப்பான சாகித்ய அகாதெமி இளம் படைப்பாளிகளுக்கான 2019-ம் ஆண்டுக்கான பால சாகித்ய புரஸ்கார், யுவ சாகித்ய புராஸ்கர் விருது அறிவிப்பு
    - பால சாகித்ய புரஸ்கர் - தேவி நாச்சியப்பன்
    - யுவ சாகித்ய புரஸ்கர் - சபரி நாதன்
    - சாகித்ய அகாதெமி தலைவர் - சந்திர சேகர் கம்பர்

9. 2019ம் ஆண்டிற்கான "மிஸ் இந்தியா" பட்டம் வென்றவர் யார்?

**விடை:** சுமன் ராவ்

**விளக்கம்**

- 2019-ம் ஆண்டிற்கான "மிஸ் இந்தியா" அழகி பட்டத்தை "சுமன் ராவ்" வென்றுள்ளார்.
    - இவர் ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்தவர்.
    - தாய்லாந்தில் நடைபெறும் உலக அழகி போட்டியில் இந்தியா சார்பாக பங்கேற்பார்.

10. 2019- Commonwealth Secretary- General's Innovation for Sustainable Development Award- விருதை பெற்றவர் யார்?

**விடை:** நிதேஷ் குமார் ஜாங்கிர்

**விளக்கம்**

- இந்தியாவின் சிறிய நகரங்களில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றிய குறைந்த விலையில், பிறந்த குழந்தை சுவாச சாதனத்தை கண்டுபிடித்த இந்திய பொறியாளரான நிதேஷ் குமார் ஜாங்கிர், லண்டனில் 2019 காமன்வெல்த் பொதுச்செயலாளரின் கண்டுபிடிப்புக்கான நிலையான மேம்பாட்டு விருதை (Commonwealth Secretary- General's Innovation for Sustainable Development Award) வென்றுள்ளார்.

11. நடப்பாண்டு Facebook Hall of Fame இல் சேர்க்கப்பட்ட சோனல் சௌகைஜாம் (ZonelSougaijam), எந்த இந்திய மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?

**விடை:** மணிப்பூர்

**விளக்கம்**

- ஒரு பயனரின் (User) தனியுரிமையை (privacy) மீறும் வாட்ஸ்அப் பிழையைக் கண்டுபிடித்ததற்காக மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த கட்டடப் பொறியாளர் சோனல் சௌகைஜாம் (22), பேஸ்புக்கால் கௌரவிக்கப்பட்டுள்ளார். இதற்காக பேஸ்புக் நிறுவனம் அவருக்கு $5000 அமெரிக்க டாலர்களை வழங்கியதுடன், வாட்ஸ்அப் பிழையைக் கண்டறிந்ததற்காக அவரை நடப்பாண்டு 'Facebook Hall of Fame' யிலும் சேர்த்துள்ளது
  - வாட்ஸ்அப் மூலம் குரல் அழைப்பு மேற்கொள்ளும் போது அழைப்பைப் பெறுபவரின் அனுமதி இல்லாமல் அழைப்பாளரை காணொலி அழைப்புக்கு மாற்ற அனுமதிக்கும் வழுவை(bug) சோனல் கண்டறிந்தார். இது அழைப்பைப் பெறுபவரின் தனியுரிமையை மீறுவதாகவும், அவர் என்ன செய்கிறார் என்பதை அவரது அனுமதியில்லாமலே பார்க்கவும் வழி வகுத்தது.

12. '2019-ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிக்கையாளர் (Journalist of the Year – 2019) என்ற மதிப்புமிக்க ரெட் இங்க் (RedInk) விருதைப் பெற்றவர் யார்?

**விடை** : ரச்னாகைரா

**விளக்கம்**

- UIDAI மற்றும் அதன் ஆதார் தகவல் கேச் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து 2018 ஆம் ஆண்டில் வெளிப்படுத்தியதற்காக திட்ரிப்யூனின் ரச்னாகைரா (RachnaKhaira), '2019-ஆம் ஆண்டின் சிறந்த பத்திரிக்கையாளர்' (Journalist of the Year – 2019) என்ற மதிப்புமிக்க ரெட் இங்க் (RedInk) விருதைப் பெற்றுள்ளார்.
  - இந்த ஊடகவியலாளரால் UIDAI சேவையகங்களில் சேமிக்கப்பட்டுள்ள ஆதார் தகவல் பாதுகாப்பானது என்ற அரசாங்கத்தின் கூற்றுகள் குறித்த கடுமையான சந்தேகங்களை எழுப்ப தொடங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

- UIDAI – Unique Identification Authority of India

13. வெயில் மரங்கள் திரைப்படம் யாரால் இயக்கப்பட்டது?

**விடை** : டாக்டர் பிஜு

**விளக்கம்**

- டாக்டர் பிஜு இயக்கிய வெயில் மரங்கள், கிழக்கு ஆசியாவின் மிகப்பெரிய விழாக்களில் ஒன்றான ஷாங்காய் சர்வதேச திரைப்பட விழாவில் மிகச் சிறந்த கலை சாதனை விருதைப் பெற்றுள்ளது.

14. மாத்ரி ஸ்ரீ ஊடக விருதுகள் யாருக்கு வழங்கப்படும்?

**விடை:** பத்திரிக்கையாளர்கள்

**விளக்கம்:**

- பத்திரிக்கைத் துறையில் தங்களது பங்களிப்பினைச் சிறப்பாக செலுத்தியதற்காக அச்சு மற்றும் மின்னணு ஊடகத்தைச் சேர்ந்த 29 பத்திரிக்கையாளர்களுக்கு மாத்ரி ஸ்ரீ ஊடக விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன.
    - மாத்ரி ஸ்ரீ ஊடக விருதுகள் நெருக்கடி நிலைக் காலத்தின் போது ஏற்படுத்தப்பட்டன.
    - இதன் முதலாவது விருது லாலா ஜகத் நாராயண் என்ற பத்திரிக்கையாளருக்கு வழங்கப்பட்டது.

## நியமனங்கள்

1. கரம்பீர் சிங் இந்தியாவின் எத்தனையாவது கடற்படை தளபதி?

**விடை:** 24

**விளக்கம்**

- இந்தியாவின் 24-வது கடற்படை தளபதியாக கரம்பீர் சிங் பதவியேற்றுக் கொண்டார்.
    - பதவிக்காலம் = 3 வருடம் அல்லது 62 வயது
    - விமான படை தளபதி = பீரேந்தர் சிங் தனோவா
    - இராணுவ தளபதி = பிபின் ராவத்

2. தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : அஜித் தோவால்

**விளக்கம்**

- தேசிய பாதுகாப்பு ஆலோசகராக அஜித் தோவால் மீண்டும் நியமனம்.
    - மத்திய கேபினட் அமைச்சருக்கு இணையான அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.
    - 1998-ம் ஆண்டு மிஸோரத்தில் எழுந்த கிளர்ச்சியை அடக்கியதற்காக இவருக்கு "கீர்த்தி சக்ரா" விருது வழங்கப்பட்டது.

3. ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் தலைவர் யார்?

**விடை:** டிஜானி முஹம்மது- பந்தே (Tijjani Muhammad- Bande)

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகள் பொதுச்சபை (UNGA)- இன் 74 வது அமர்வின் தலைவராக நைஜீரியாவின் ஐ.நா தூதுவர் டிஜானி முஹம்மது- பந்தே (Tijjani Muhammad-Bande) தேர்ந்தெடுக்கப்பட்டார்.

4. காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (BPR&D) பொது இயக்குனர் யார்?

**விடை** : VSK கமுதி

**விளக்கம்**

- மூத்த இந்தியக் காவல் துறை அதிகாரியான VSK கமுதி என்பவர் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (BPR&D – Bureau of Police Research and Development) பொது இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இந்த அமைப்பு 1970 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பானது நாட்டில் காவல் துறையினர் சந்திக்கும் பிரச்சனைகளிலிருந்து அவர்கள் மீண்டு வருவதற்குப் பரிந்துரைகளை உருவாக்கும் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்கின்றது.

5. பாகிஸ்தானின் ISI பிரிவின் இயக்குநர் யார்?

**விடை:** ∴பைஸ் ஹமீத் Faiz Hammed

**விளக்கம்**

- பாகிஸ்தான், லெப்டினனட் ஜெனரல் ∴பைஸ் ஹமீத்தை இடை- சேவைகள் புலனாய்வு துறையின் (ISI) இயக்குநராக நியமித்துள்ளது.
    - இதற்கு முன்பு அவர் ISI யில் எதிர் புலனாய்வு பிரிவின் தலைவராக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

6. சூரிய ஆற்றலில் இயங்கும் சமையலறையை மட்டுமே கொண்டுள்ள இந்தியாவின் முதல் கிராமமாக மாறியுள்ள பாஞ்சா கிராமம், ம.பி மாநிலத்தின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

**விடை:** பேதுல்

**விளக்கம்**

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் பேதுல் மாவட்டத்தில் உள்ள பாஞ்சா கிராமம், சூரிய சமையலறையை மட்டுமே கொண்டுள்ள இந்தியாவின் முதல் கிராமமாக மாறியுள்ளது. இந்தக் கிராமத்தில் உள்ள 75 வீட்டினரும், தங்களது சமையல் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்காக சூரிய அடுப்பையே சார்ந்துள்ளனர். விறகு அடுப்புகளையோ அல்லது LPG எரிவாயு உருளை அடுப்புகளையோ அவர்கள் பயன்படுத்துவதில்லை.
    - மும்பை ஐஐடியைச் சேர்ந்த குழுவினர், ஒரு தனித்துவமான சூரிய ஆற்றலில் இயங்கும் அடுப்பு ஒன்றை வடிவமைத்துள்ளனர். இதன் காரணமாக, அக்கிராமத்தின் மக்கள் இப்போது விறகு தேவைக்காக மரங்களை வெட்டுவதை நிறுத்தியுள்ளனர்.

7. IMD- இன் தலைவர் யார்?

**விடை:** மிருத்ஞ்செய் மகாபத்ரா

**விளக்கம்**

- புகழ் பெற்ற விஞ்ஞானியும் புயல் எச்சரிக்கை நிபுணருமான மிருத்ஞ்செய் மகாபத்ரா இந்திய வானிலை ஆய்வுத் துறையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர் இந்தியாவின் சூறாவளி மனிதர் எனப் பிரபலமாக அறியப்படுகின்றார்

- ○ இவரும் இவரின் புயல் எச்சரிக்கைக் குழுவினரும் பைலின் (2013) ஹீட்ஹீட் (2014), டிட்லி (2018) ஆகிய புயல்கள் குறித்து துல்லியமான முன்னறிவிப்புகளை வழங்கினர்.

8. ஹிமாச்சலபிரதேசம் உயர்நீதி மன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : நீதிபதி வெ. இராமசுப்பிரமணியம்

**விளக்கம்**

- ஹிமாச்சலப்பிரதேச உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நீதிபதி வெ. இராமசுப்பிரமணியன் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ○ ஹிமாச்சலப்பிரதேச ஆளுநர் - ஆச்சார்யா தேவவிரத்
  - ○ ஹிமாச்சல மாநில உயர் நீதிமன்றம் அமைந்துள்ள இடம் - சிம்லா

9. இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய செயற்குழு இயக்குநராக நியமனம் செய்யப்பட்டுள்ளவர் யார்?

**விடை** : ரபிமிஸ்ரா

**விளக்கம்**

- இந்திய ரிசர்வ் வங்கியின் புதிய செயற்குழு இயக்குநராக ரபிமிஸ்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ○ வங்கியில்லாத மற்றும் கூட்டுறவு வங்கிகளை மேற்பார்வை செய்வது இவரது பணியாகும்.

10. இந்திய கடலோர காவல் படையின் இயக்குநர் யார்?

**விடை** : கிருஷ்ணசாமி நடராஜன்

**விளக்கம்**

- இந்திய கடலோர காவல் படையின் அடுத்த இயக்குநர் ஜெனரலாக நியமிக்கப்பட்டுள்ளார்.
  - ○ மூன்றரை ஆண்டுகால சிறப்பான சேவையின் பின்னர் ஓய்வு பெறும் தற்போதைய ராஜேந்திர சிங்குக்கு பதிலாக அவர் பதவியேற்க்கவுள்ளார்.

11. மணிப்பூர் எந்த ஆண்டு மாநிலமாக அறிவிக்கப்பட்டது?

**விடை** : 1972

**விளக்கம்**

- மணிப்பூர் மாநிலத்தின் கூடுதல் ஆளுநராக P.B. ஆச்சார்யா நியமிக்கப்பட்டுள்ளார்.
    - இவர் தற்போது நாகலாந்து மாநில ஆளுநராக உள்ளார்.
    - TNPSC துளிகள் - மணிப்பூர் மாநில முதல்வர் - N. பிரன் சிங் மணிப்பூர் மாநில தலைநகர் - இம்பால்
    - மணிப்பூர் மாநிலமாக அறிவிக்கப்பட்ட நாள் - ஜனவரி 21, 1972

12. தமிழக காவல்துறை சட்டம் - ஒழுங்கு தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை**: J.K திரிபாதி

**விளக்கம்**

- J.K திரிபாதி தமிழக காவல் துறை சட்டம் - ஒழுங்கு டி.ஜி.பி- யாக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - மத்திய சீருடை பணியாளர் தேர்வு வாரியம் இவரது பெயரை பரிந்துரை செய்து உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பியது.
    - 1985-ம் ஆண்டு ஐ.பி.எஸ் அதிகாரியாக இவர் தேர்ச்சி பெற்றார்.
    - காவல் துறையில் சிறப்பாக பணி புரிந்ததற்காக கடந்த 2001-ம் ஆண்டு ஸ்காட்லாந்து நாட்டின் சர்வதேச பதக்கம் கிடைத்தது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

1. பிரம்மோஸ் ஏவுகணை எந்த நாட்டுடன் இணைந்து உருவாக்கப்பட்டது?

**விடை** : ரஷ்யா

**விளக்கம்**

- இந்தியாவில் ஒடிசாவில் சாந்திபூரில் இருந்து பிரம்மோஸ் சூப்பர்சோனிக் கப்பல் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
    - DRDO மற்றும் NPOM (ரஷ்யாவின் இராணுவ தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியவற்றிற்கும் இடையே ஒரு கூட்டு முயற்சியால் பிரம்மோஸ் உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

2. தற்போது ரெப்போ ரேட்டின் மதிப்பு என்ன?

**விடை:** 5.75%

**விளக்கம்**

- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கை கூட்டத்தில், 'ரெப்போ' என்ற குறுகிய கால கடன்களுக்கான வட்டி விகிதம், 0.25 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோல, வங்கிகளுக்கான வட்டி விகிதமும், 0.50 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது. இணையதள பணப் பரிவர்த்தனை கட்டணங்களையும், ஆர்.பி.ஐ., ரத்து செய்துள்ளது.
    - இனி ரிசர்வ் வங்கியிடம் இருந்து வங்கிகள் பெறும் கடன்களுக்கான வட்டி (ரெப்போ ரேட்) 5.75 சதவீதமாகவும், வர்த்தக வங்கிகளிடம் இருந்து ரிசர்வ் வங்கி பெறும் கடன்களுக்கான வட்டி (ரிவர்ஸ் ரெப்போ ரேட்) 5.50 சதவீதமாகவும் இருக்கும்.

3. நிதியியல் கல்வி வாரம் என்பது எந்த இந்திய அமைப்பின் முயற்சியாகும்?

**விடை** : இந்திய ரிசர்வ் வங்கி

**விளக்கம்**

- இந்திய ரிசர்வ் வங்கி, ஜூன் 3 முதல் 7 வரை நாடு முழுவதும் நடப்பாண்டு நிதியியல் கல்வி வாரத்தை கடைப்பிடிக்கவுள்ளது. "Farmers and How they Benefit by being a Part of The Formal Banking System – விவசாயிகள் மற்றும் முறையான வங்கியியல் அமைப்பின் கீழ் விவசாயிகள் பெறும் நன்மை" என்பது நடப்பாண்டில் வரும் இவ்வாரத்துக்கான கருப்பொருளாகும்.

4. சரக்கு சேவை வரி (ஜி.எஸ்.டி) கவுன்சில் கூட்டத்தின் தலைமை வகிப்பவர் யார்?

**விடை**: நிர்மலா சீதாராமன்

**விளக்கம்**

- சரக்கு சேவை வரி (ஜி.எஸ்.டி) கவுன்சில் கூட்டம் ஜீன் 20ம் தேதி நடைபெறுகிறது
    - தலைமை வகிப்பவர் - நிர்மலா சீதாராமன்
    - அனைத்து மாநில நிதியமைச்சர்கள் இதில் கலந்து கொள்கின்றனர்

5. இந்திய ஜவுளி துறையில் ஏற்றுமதியிலும், உள்நாட்டு தேவைகளையும் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிப்பது எது?

**விடை** : கோவை மண்டலம்

**விளக்கம்**

- தமிழக அரசு புதிய ஜவுளிக் கொள்கையை வெளியிட்டுள்ளது
    - இந்திய ஜவுளி துறையில் ஏற்றுமதியிலும், உள்நாட்டு தேவைகளையும் பூர்த்தி செய்ய முக்கிய பங்கு வகிப்பது கோவை மண்டலமாகும்.
    - இக்கொள்கையில் "பிராசசிங்" தொழிலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டுள்ளது.
    - சுத்திகரிப்பு நிலையங்களில் 85% நீரை சுத்தம் செய்து மறுசுழற்சிக்கு பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

6. விண்வெளிப் போர் சார்ந்த ஆயுத அமைப்புகள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும் அமைப்பு எது?

**விடை** : DSRA

**விளக்கம்**

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாதுகாப்பிற்கான அமைச்சரவைக் குழுவானது விண்வெளிப் பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பை (DSRA – Defence Space Research Agency) அமைக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.
    - DSRA ஆனது விண்வெளிப் போர் சார்ந்த ஆயுத அமைப்புகள் மற்றும் தொழில் நுட்பங்கள் ஆகியவற்றை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும்.
    - இது விண்வெளிப் பாதுகாப்பு அமைப்பிற்கு (DSA – Defence Space Agency) பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு உதவியை அளிக்கவிருக்கின்றது.
    - 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செயற்கைக் கோள்களை சுட்டு வீழ்த்தும் திறன் கொண்ட செயற்கைக் கோள் எதிர்ப்புப் பரிசோதனையை இந்தியா வெற்றிகரமாக நிகழ்த்தியது என்பது குறிப்பிடதக்கது.

7. NASAMS – II – ஐ இந்தியாவிற்கு வழங்கவுள்ள நாடு எது?

**விடை** : அமெரிக்கா

**விளக்கம்**

- அமெரிக்காவானது நிலப்பரப்பிலிருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் தேசிய மேம்படுத்தப்பட்ட ஏவுகணை அமைப்பு – II (NASAMS – II) என்பதினை இந்தியாவிற்கு விற்பனை செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது
    - இது வான்வெளித் தாக்குதல்களிலிருந்து தேசியத் தலைநகர்ப் பகுதியைப் பாதுகாப்பதற்கான மேம்படுத்தப்பட்ட வான் பாதுகாப்பு அமைப்பாகும்

8. சமீபத்தில் வடகிழக்கு இந்தியாவில் கண்டுபிடிக்கப்பட்ட உயிரினம் எது?

**விடை** : மிக்ரிலெட்டா அய்சானி (Micryletta aishani)

**விளக்கம்**

- வடகிழக்கு இந்தியாவில் அதிலும் குறிப்பாக அஸ்ஸாம் மாநிலத்தில் ''நெல் தவளை'' என்ற ஒரு புதிய இனத்தினை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
    - இது மிக்ரிலெட்டா அய்சானி (Micryletta aishani) என்று பெயரிடப்பட்டு இருக்கின்றது.
    - மிக்ரிலெட்டா பேரினத்தின் கீழ் உலக அளவில் அங்கீகரிக்கப்பட்ட இனங்களில் 5-வது தவளை உருவெடுத்துள்ளது.
    - சமஸ்கிருதத்தில் அய்சானி என்பது வடகிழக்கைக் குறிக்கும்

9. இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) தனக்கென சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைக்க, எந்த ஆண்டை இலக்காக நிர்ணயித்துள்ளது?

**விடை:** 2030

**விளக்கம்**

- இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் Dr. K சிவன் 2030 ஆம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி ஆய்வு மையம் தனக்கென சொந்தமாக விண்வெளி நிலையத்தை அமைக்கும் என அறிவித்தார். இது விண்ணுக்கு அதிகமான விண்வெளி வீரர்களை அனுப்ப ISROவுக்கு உதவும். விண்வெளி நிலையம் என்பது வாழத் தகுந்த செயற்கைக்கோள் போன்றது. இது, நீண்ட காலத்திற்கு விண்ணிலிருந்து ஆய்வு செய்ய உறுப்பினர்களுக்கு உதவும் திறன் கொண்டது.

10. எந்த செருப்பிற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது?

**விடை** : கோல்ஹாபுரி

**விளக்கம்**

- கோல்ஹாபுரி செருப்பிற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
    - மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களின் 4 மாவட்டங்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
    - கோல்ஹாபுரி பாரம்பரிய தோல் செருப்பு வகையாகும்.

11. சிக்கலான திட்டமான அதிக எடை கொண்ட பால்கன் விண்கலத்தை விண்ணிற்குச் செலுத்தியுள்ள நிறுவனம் எது?

**விடை** : ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம்

**விளக்கம்**

- எலோன் மஷ்கினின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம், தனது மூன்றாவது மற்றும் சிக்கலான திட்டமான அதிக எடை கொண்ட பால்கன் விண்கலத்தை விண்ணிற்குச் செலுத்தியுள்ளது.
    - இது பின்வரும் முக்கியமான பொருட்களை எடுத்துச் சென்றது.
    - தொலைதூர விண்வெளி அணுக் கடிகாரம் - DSAC (Deep Space Atomic Clock) இதன் நோக்கம் ஒரு புவி நேரத்தைச் சார்ந்திருக்காமல் தன்னகத்தே விண்கலப் பயணத்திற்கு உதவுவதாகும்.
    - ASCENT (Advanced Spacecraft Energetic Non-toxic Propellant) பசுமை எரிபொருள்.
    - சூரிய ஒளியின் மூலம் பயணம் - இது சூரிய ஒளியால் மட்டுமே செலுத்தப்படும் முதல் சுற்றுப்பாதை விண்கலமாக மாற முற்படுகின்றது.

12. கியூரியாசிட்டி செவ்வாய்த் திட்டம் நாசாவினால் எப்பொழுது செயல்படுத்தப்பட்டது?

**விடை** : 2011 ஆம் ஆண்டு நவம்பர் 26

**விளக்கம்**

- நாசாவின் செவ்வாயில் உள்ள கியூரியாசிட்டி வாகனம், அக்கோளில் இதுவரை அளவிடப்படாத மிக அதிக அளவிலான மீத்தேனைக் கண்டறிந்துள்ளது.

- இது 21 ppbv (per billion units by volume – கனஅளவில் ஒரு பில்லியன் அலகில் 21 பகுதிகள்) என்று அளவிடப்பட்டுள்ளது.
- இந்த கண்டுபிடிப்பு நடமாடும் வாகனத்தின் பாகமான செவ்வாயில் மாதிரிப் பகுப்பாய்வினை சரி செய்யக்கூடிய லேசர் நிறமாலைமானியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது.
- கியூரியாசிட்டி செவ்வாய்த் திட்டம் நாசாவினால் கேப் கேனவரிலிருந்து 2011 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று செலுத்தப்பட்டது.

## விளையாட்டு நிகழ்வுகள்

1. தேசிய அளவிலான சப்-ஜீனியர் வலு தூக்கும் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற பிரிவு?

**விடை** : தமிழ்நாடு ஆண்கள் பிரிவு

**விளக்கம்**

- தேசிய அளவிலான சப்-ஜுனியர் வலுதூக்கும் போட்டியில் தமிழ்நாடு ஆண்கள் பிரிவு சாம்பியன் பட்டம் வென்றது.

2. மனு பாக்கர் எந்த விளையாட்டு துறையை சேர்ந்தவர்?

**விடை** : துப்பாக்கிச் சுடுதல்

**விளக்கம்**

- இந்தியாவைச் சேர்ந்த மனு பாக்கர் 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிக்கு துப்பாக்கிச் சுடுதலில் இந்தியாவின் சார்பாக பங்கேற்கும் தகுதியை பெற்றார்.
  - சர்வதேச துப்பாக்கிச் சுடுதல் கூட்டமைப்பின் உலக கோப்பை போட்டியில் 4-ம் இடத்தை பெற்றதன் மூலம் தகுதி பெற்றுள்ளார்

3. 2019 இன் UEFA சாம்பியன்ஷிப்பை வென்ற அணி எது?

**விடை** : லீவர்பூல் அணி

**விளக்கம்**

- 2019 இன் UEFA சாம்பியன்ஷிப்பை லிவர்பூல் வென்றுள்ளது.
  - போட்டன்ஹாமை வீழ்த்தி லீவர்பூல் அணியானது 6-வது முறையாக ஐரோப்பாவின் சாம்பியனாக உருவெடுத்துள்ளது.

- கடந்த ஏழு ஆண்டுகளில் லீவர்பூல் அணிக்கு கிடைத்த முதல் டிராபி இதுவேயாகும்.

4. காண்டர் ∴பிட்ஸ்ஜெரால்ட் U21 என்ற பட்டம் எந்த விளையாட்டுடன் தெடர்புடையதாகும்?

**விடை:** ஹாக்கி

**விளக்கம்**

- அயர்லாந்தின் டப்ளினில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அயர்லாந்தை வெற்றி பெற்றதன் மூலம் இந்திய ஜீனியர் மகளிர் ஹாக்கி அணி காண்டர் ∴பிட்ஸ்ஜெரால்ட் U21 (Cantor Fitzgerald U21) சர்வதேச பட்டத்தை வென்றது.

5. பிரம்மோஸ் ஏவுகணை எந்த நாட்டுடன் இணைந்து உருவாக்கப்பட்டது?

**விடை** : ரஷ்யா

**விளக்கம்**

- இந்தியாவில் ஒடிசாவில் சாந்திபூரில் இருந்து பிரம்மோஸ் சூப்பர்சோனிக் கப்பல் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
    - DRDO மற்றும் NPOM (ரஷ்யாவின் இராணுவ தொழில்நுட்ப நிறுவனம்) ஆகியவற்றிற்கும் இடையே ஒரு கூட்டு முயற்சியால் பிரம்மோஸ் உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

6. 2019 FIFA மகளிர் உலகக் கோப்பை எங்கு நடைபெறவுள்ளது?

**விடை** : பிரான்ஸ்

**விளக்கம்**

- 2019 FIFA மகளிர் உலகக் கோப்பையின் 8வது பதிப்பாகும். இது ஜூலை 7, முதல் நடைபெறவுள்ளது.
    - அது பிரான்ஸில் ஒன்பது நகரங்களில் நடைபெறவுள்ளது.

7. பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றவர் யார்?

**விடை** : ஆஸ்லி பர்டி

**விளக்கம்**

- பிரெஞ்சு ஒபன் டென்னிஸ் போட்டி மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆஸ்லி பா்டி சாம்பியன் பட்டம் வென்றார்
    - இவர் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவர்
    - பிரிட்டனின் ஜோஹன்னா கொண்டாவை வீழ்த்தினார்.

8. பிரெஞ்சு ஒபன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் இறுதி போட்டிக்கு முன்னேறியது யார்?

**விடை** : ரபேல் நடால்

**விளக்கம்**

- பிரெஞ்சு ஒபன் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரபேல் நடால் இறுதி போட்டிக்கு முன்னேறினார்.
    - நடால் தரவரிசையில் 2-ம் இடத்தில் உள்ளார்

9. 2019 ஆம் ஆண்டின் பிரெஞ்சு ஓபனின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் பட்டம் வென்றவர் யார்?

**விடை** : ஆஸ்லே பார்டி

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டின் பிரெஞ்சு ஓபனின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஆஸ்திரேலியாவவைச் சேர்ந்த ஆஸ்லே பார்டியும் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினைச் சேர்ந்த ரபேல் நடாலும் வெற்றி பெற்றுள்ளனர்
    - ரபேல் நடால் 12வது முறையாக பிரெஞ்சு ஓபன் பட்டத்தைப் பெற்றுள்ளார்.
    - ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் ஜெர்மனியைச் சேர்ந்த கெவின் கிராவெய்ட்ஸ் மற்றும் ஆண்டிரியாஸ் மியஸ் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.
    - பெண்களுக்கான இரட்டையர் பிரிவில் ஹங்கேரியைச் சேர்ந்த டைமா பாபோஸ் மற்றும் பிரெஞ்சைச் சேர்ந்த கிறிஸ்டினா மிலாடெனோவிக் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

10. சர்வதேச தடகள கூட்டமைப்பு மன்றத்தின் (International Association of Athletics Federation) புதிய பெயர் என்ன?

**விடை** : உலக தடகளம் (World Athletics)

**விளக்கம்**

- சர்வதேசத் தடகளக் கூட்டமைப்பு மன்றம் (International Association of Athletics Federation) “உலகத் தடகளம்” என்று தனது பெயரைத் தானே மாற்றிக் கொண்டுள்ளது. இது தனது பெயர் மாற்றத்தினைப் பிரதிபலிப்பதற்காக ஒரு புதியச் சின்னத்தை வெளியிட்டுள்ளது.
    - **(World Athletics)**
    - இந்தப் புதிய சின்னத்தில் “World” என்பதில் “W” ஆனது போட்டியில் வெற்றி பெற்ற பின்பு வீரர் தனது கையை உயர்த்துவதையும் “Athletics” என்பதில் “A” ஆனது தடகள வீரரின் கவனத்தையும் குறிக்கின்றது. “W” மற்றும் “A” ஆகியவற்றின் மேல் வில் போன்ற ஒரு அமைப்பு தடகள சமூகம் ஒன்றிணைந்து வருவதையும் குறிக்கின்றது

11. 2019 ஆம் ஆண்டில் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்ற நாடு எது?

**விடை** : சீனா

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டின் ITTF உலக ஹாங்காங் ஓபன் போட்டித் தொடரில் ஒற்றையர் பிரிவில் இரண்டு தங்கப் பதக்கங்கள் மற்றும் இரட்டையர் பிரிவில் இரண்டு தங்கப் பதக்கங்கள் என அனைத்து 4 தங்கப் பதக்கங்களையும் சீனா வென்றுள்ளது.
    - இது சர்வதேச டேபிள் டென்னிஸ் கூட்டமைப்பின் ( ITTF – International Table Tennis Federation) கீழ் ஹாங்காங் டேபிள் டென்னிஸ் மன்றத்தினால் நடத்தப்படுகின்றது.

12. 2020 கோபா அமெரிக்காவை (COPA America) நடத்தவுள்ள நாடு எது?

**விடை** : அர்ஜென்டினா மற்றும் கொலம்பியா

**விளக்கம்**

- தென் அமெரிக்காவின் கால்பந்து நடத்தும் குழுவான CONMEBOL, ஆஸ்திரேலியா மற்றும் கத்தாரை 2020 கோபா அமெரிக்காவில் - (COPA America) பங்கேற்க அழைப்பு விடுத்துள்ளது.

    - கோபா 2020-ஐ அர்ஜென்டினா மற்றும் கொலம்பியா இணைந்து வழங்கவுள்ளது.

13. எப்.ஐ.எச் ஆடவர் ஹாக்கி சீரிஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற நாடு எது?

**விடை** : இந்தியா

**விளக்கம்**

- எப்.ஐ.எச் ஆடவர் ஹாக்கி சீரிஸ் இறுதிப்போட்டியில் தென்னாப்பிரிக்காவை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.
    - இந்த வெற்றியின் மூலம் 2020 ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய அணி தகுதி பெற்றுள்ளது

14. உலக கால்பந்து போட்டி தரவரிசையில் இந்தியாவின் இடம் என்ன?

**விடை** : 101

**விளக்கம்**

- ∴பிபா அமைப்பு உலக கால்பந்து தரவரிசையை வெளியிட்டுள்ளது
    - முதல் இடம் - பெல்ஜியம்
    - உலக சாம்பியன் பிரான்ஸ் அணி 2-ம் இடத்தில் உள்ளது
    - இந்தியா – 101 வது இடம்

15. உலக ஆடவர் வில் வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற அணி?

**விடை** : சீனா

**விளக்கம்**

- உலக வில் வித்தை சாம்பியன்ஷிப் போட்டியில் ஆடவர் ரெக்கவர் பிரிவில் இந்திய அணி வெள்ளி பதக்கம் வென்றது
    - சீனா அணி தங்கப் பதக்கத்தை வென்றது. போட்டி நடைபெறும் இடம் - டென்ஸ்பாச் (நெதர்லாந்து)

16. புவனேஸ்வரி குமாரியின் சாதனை முறியடித்தவர் யார்?

**விடை** : ஜோஷ்னா சின்னப்பா

**விளக்கம்**

- சீனியர் தேசிய ஸ்குவாஸ் சாம்பியன் பட்டம் வென்றார் ஜோஷ்னா சின்னப்பா
    - 17-வது முறையாக பட்டம் வென்று புவனேஸ்வரி குமாரியின் சாதனையை (16 முறை சாம்பியன்) முறியடித்துள்ளார்.

17. 119 வது US ஓபனை வென்றவர் யார்?

**விடை:** கேரி உட்லேண்ட்

**விளக்கம்**

- கேரி உட்லேண்ட் 119 வது US ஓபனை வென்றார். இரண்டு முறை நடப்பு சாம்பியனான ப்ரூக் கோய்ப்காவை தோற்கடித்து அவரது முதல் பட்டத்தை கைப்பற்றினார்.

18. பெண்கள் டென்னிஸ் மன்றத்தின் (WTA-Women's Tennis Association) தரவரிசையில் முதலிடத்தில் உள்ளவர் யார்?

**விடை:** நோமி ஒசாகா

**விளக்கம்**

- பெண்கள் டென்னிஸ் மன்றத்தின் (WTA-Women's Tennis Association) தரவரிசையில் ஜப்பானைச் சேர்ந்த நோமி ஒசாகா என்பவர் முதலிடத்தில் உள்ளார்.
    - டென்னிஸ் தொழில்சார் மன்றத்தின் (ATP-Association of Tennis Professionals) தரவரிசையில் செரிபியாவைச் சேர்ந்த நோவாக் ஜோகோவிக் முதலிடத்தில் உள்ளார்.
    - பெண்கள் டென்னிஸ் போட்டியை நிர்வகிப்பதற்காக WTA ஆனது 1973 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
    - ஆண்கள் டென்னிஸ் போட்டியை நிர்வகிப்பதற்காக ATP ஆனது 1972 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.

19. உலக கோப்பை கிரிக்கெட் போட்டியில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய முதல் இந்தியர் யார்?

**விடை** : சேட்டன் சர்மா

**விளக்கம்**

- உலக கோப்பையில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்தி இந்திய வீரர் மொகமது ஷமி சாதனை புரிந்தார்.
    - உலக கோப்பையில் ஹாட்ரிக் விக்கெட் வீழ்த்திய 2–வது இந்தியர் ஆவர்.
    - இதற்கு முன்பு 1987–ம் ஆண்டு உலககோப்பை போட்டியில் சேட்டன் சர்மா இந்த சாதனை புரிந்தார்.

20. எப் ஐ எச் மகளிர் ஹாக்கி சீரிஸ் இறுதி போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற நாடு எது?

**விடை** : இந்தியா

**விளக்கம்**

- எப் ஐ எச் மகளிர் ஹாக்கி சீரிஸ் இறுதி போட்டியில் ஜப்பான் அணியை வீழ்த்தி இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது.
    - இந்த வெற்றியின் மூலம் ஒலிம்பிக் தகுதி சுற்று போட்டிக்கு தேர்வாகி உள்ளது.
    - போட்டி நடைபெற்ற இடம் - ஹிரோஷிமா (ஜப்பான்)

21. பெடரர் கைப்பற்றும் ஹாலே எத்தனையாவது பட்டம்?

**விடை** : 10வது

**விளக்கம்**

- ஹாலே ஒபன் பெடரர் சாம்பியன் பட்டம் வென்றார்.
    - இது பெடரர் கைப்பற்றும் 10-வது ஹாலே பட்டமாகும்.

22. எந்தவொரு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துதல் மற்றும் அவற்றிற்கு ஆதரவளித்தல் தொடர்பாக எந்த நாட்டின் மீது விதிக்கப்பட்ட அனைத்துத் தடைகளையும் சர்வதேச ஒலிம்பிக் குழு நீக்கியுள்ளது?

**விடை:** இந்தியா

**விளக்கம்**

- எந்தவொரு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளையும் நடத்துதல் மற்றும் அவற்றிக்கு ஆதரவளித்தல் தொடர்பாக இந்தியாவின் மீது விதிக்கப்பட்ட

அனைத்துத் தடைகளையும் சர்வதேச ஒலிம்பிக் குழு (IOC- International Olympic Committee) நீக்கியுள்ளது.

- சர்வதேசப் போட்டிகளில் தகுதி பெறும் அனைத்து விளையாட்டு வீரர்களையும் இந்தியாவிற்குள் நுழைய அனுமதிப்பதாக ஒரு எழுதப்பட்ட உறுதிமொழியை இந்திய அரசு IOC- யிடம் வழங்கியது.
- பாகிஸ்தான் மற்றும் கொசாவா உள்ளிட்ட அனைத்து நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும் இந்தியாவில் நடைபெறவிருக்கும் IOC விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க அனுமதிக்கப்பட இருக்கின்றனர்.

23. சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் அதிவேகமாக 20,000 ரன்களை கடந்த வீரர் யார்? எத்தனை போட்டிகளில்?

**விடை:** விராட் கோலி, 417 ஆட்டங்களில்

**விளக்கம்**

- சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் 20,000 ரன்களை அதிவேகமாக கடந்த வீரர் என்ற சாதனையை இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி படைத்துள்ளார்.
  - விராட் கோலி 417 போட்டிகளில் 20,000 ரன்களை கடந்து நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கரின் சாதனையை முறியடித்துள்ளார்.

24. தேசிய கிரிக்கெட் அகாதெமியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

**விடை:** டிராவிட்

**விளக்கம்**

- தேசிய கிரிக்கெட் அகாதெமியின் தலைவராக டிராவிட் நியமனம்.
  - பிசிசிஐ நியமித்துள்ளது.
  - டிராவிட் தற்போது இந்திய ஏ அணியின் பயிற்சியாளராக உள்ளார்.
  - நினைவிற் கொள்க : கிரிக்கெட் விளையாட்டிற்காக அமைக்கப்பட்ட மத்திய அரசு குழு “நீதிபதி லோதா குழு”

## வர்த்தக நிகழ்வுகள்

1. 5ஜி அலைக்கற்றை ஏலம் விடப்படும் என அறிவித்த அமைச்சர் யார்?

**விடை** : மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத்

**விளக்கம்**

- நிகழாண்டில் 5ஜி அலைக்கற்றை ஏலம் விடப்படும் என்று மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் ரவி சங்கர் பிரசாத் தெரிவித்துள்ளார்

2. இந்தியாவில் டிஜிட்டல் பரிவர்த்தனையை அதிகரிப்பதற்காக RBI ஆல் தொடங்கப்பட்ட கமிட்டியின் பெயர் என்ன?

**விடை** : நந்தன் நிலேகனி

**விளக்கம்**

- இந்திய ரிசா்வ் வங்கியின் ஆளுநரான சக்தி காந்த தாஸிடம் நந்தன் நிலேகனி கமிட்டி இந்தியாவில் டிஜிட்டல் பரிவா்த்தனை முறையை அதிகரிப்பதற்கான ஆலோசனையை வழங்கியுள்ளனர்
    - இந்த கமிட்டி 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 உறுப்பினா்களை கொண்டு தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

3. இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) ஏ.டி.எம். கட்டணங்கள் மற்றும் மற்ற கட்டணங்கள் முழுவதையும் ஆய்வு செய்ய அமைத்துள்ள குழுவின் தலைவா் யாா்?

**விடை** : வி.கே. கண்ணன்

**விளக்கம்**

- இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) ஏ.டி.எம். கட்டணங்கள் மற்றும் மற்ற கட்டணங்கள் முழுவதையும் ஆய்வு செய்ய இந்திய வங்கிகள் சங்கத்தின் (IBA) தலைமை நிர்வாகியான வி.கே. கண்ணன் தலைமையில் ஒரு உயர் மட்ட குழு ஒன்றை அமைத்துள்ளது.

4. UNCTAD வெளியிட்டுள்ள உலக முதலீட்டு அறிக்கை 2019இன் படி இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு (FDI) எத்தனை சதவீதம் உயர்ந்துள்ளது?

**விடை** : 6%

**விளக்கம்**

- வா்த்தகம் மற்றும் மேம்பாடு தொடா்பான ஐக்கிய நாடுகளின் மாநாடு (UNCTAD) வெளியிட்டுள்ள உலக முதலீட்டு அறிக்கை 2019இன் படி இந்தியாவின் அந்நிய நேரடி முதலீடு (FDI) 6% அதிகரித்து 2018-ல் 42 பில்லியன் அமெரிக்க டாலா்களாக உயா்ந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

  - 2017-18 ஆம் ஆண்டில் அந்நிய நேரடி முதலீட்டிற்கான முதல் 20 ஹோஸ்ட் பொருளாதாரங்களில் இந்தியா இடம் பெற்றது

5. TIEA வின் விரிவாக்கம் என்ன?

**விடை** : Tax information exchange agreement

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டு மே 21 அன்று மார்ஷல் தீவுடன் வரிப் பரிமாற்றம் ஒப்பந்தம் (TIEA – tax information exchange agreement) ஒன்றில் ஈடுபட்டுள்ளதாக இந்தியா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.
  - இது வரி தொடர்பான விவகாரங்கள் மீதான தகவல் பரிமாற்றத்திற்காக ஒரு சிறந்த கட்டமைப்பை அளிக்கின்றது இது வரி ஏய்ப்பு மற்றும் வரித் தவிர்ப்பு ஆகியவற்றைத் தடுக்க உதவும்
  - மார்ஷல் தீவுகள் ஹவாய் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையே, பசுபிக் கடலில் உள்ள எரிமலைத் தீவுகள் மற்றும் பவளத் தீவுகளின் சங்கிலித் தொடராகும்

6. நடப்பு நிதியாண்டில் (FY20) இந்தியாவின் வளர்ச்சி கணிப்பை எவ்வளவாக ∴பிட்ச் (Fitch) குறைத்தது?

**விடை**: 6.8% முதல் 6.6%

**விளக்கம்**

- கடந்த ஆண்டுகளில் உற்பத்தி மற்றும் வேளாண் துறைகளின் மந்தநிலை காரணமாக நடப்பு நிதியாண்டில் (FY20) இந்தியாவின் வளர்ச்சி கணிப்பை 6.8% முதல் 6.6% ஆக Fitch ∴பிட்ச் குறைத்தது
  - ∴பிட்ச் மதிப்பீடுகள் ஹியர்ஸ்ட் கார்ப்பரேஷனின் துணை நிறுவனமாகும்

## முக்கிய தினங்கள்

1. 2019-ஆம் ஆண்டின் உலக புகையிலை தினத்தின் கருத்துரு என்ன?

**விடை** : "புகையிலை மற்றும் நுரையீரல் சுகாதாரம்" Tobacco and Lung health

**விளக்கம்**

- மே 31, உலக புகையிலை ஒழிப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. இந்நாள் உலக சுகாதார அமைப்பினால் தொடங்கப்பட்டது.
    - இந்தியாவின் கருத்துரு : ‘‘புகையிலை மற்றும் நுரையீரல் சுகாதாரம்’’
    - Theme 2019 : “Tobacco and Lung health”

2. இந்தியாவின் 29-வது மாநிலமாக அறிவிக்கப்பட்ட மாநிலம் எது?

**விடை** : தெலுங்கானா

**விளக்கம்**

- தெலுங்கானா இந்தியாவின் 29-வது மாநிலமாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
    - நீதிபதி ஸ்ரீ கிருஷ்ணா தலைமையிலான குழு தனி மாநில கோரிக்கையை பரிந்துரை செய்தது.
    - அதன்படி 2014-ம் ஆண்டு ஜுன் 2-ம் தேதி தெலுங்கானா தனி மாநிலமாக அறிவிக்கப்பட்டது.
    - தெலுங்கானாவின் தலைநகரம் - ஹைதராபாத்

3. 2019 ஆம் ஆண்டின் சர்வதேச பால் தினத்தின் கருத்துரு என்ன?

**விடை** : “Drink milk: Today & everday”

**விளக்கம்**

- ஜீன்-1 சர்வதேச பால் தினமாக அனுசரிக்கப்படுகிறது
    - 2019 ஆம் ஆண்டின் கருத்துரு
    - பாலை குடிக்கவும்: இன்றும் மற்றும் தினமும்
    - Theme for 2019: Drink milk: Today & everday”
    - 2001 ஆம் ஆண்டு முதல் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பால் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.

4. உலக மிதிவண்டி தினம் எப்போது?

**விடை**: ஜுன் 3

**விளக்கம்**

- ஜுன் 3 உலக மிதிவண்டி தினம்

- ○ மிதிவண்டியின் பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கம் இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது

5. நிதியியல் கல்வி வாரம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை** : ஜுன் 3 – 7

**விளக்கம்**

- நிதியியல் கல்வி வாரமானது ஒவ்வொரு ஆண்டும் ஒரு முக்கியத் தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ரிசர்வ் வங்கியின் மையப்படுத்தப்பட்டப் பிரச்சாரமாகும்.
  - ○ இவ்வருட நிதியியல் கல்வி வாரமானது விவசாயிகள் மீதும் முறையான வங்கி அமைப்பின் ஒரு அங்கமாக இருப்பதன் மூலம் அவர்கள் எவ்வாறு பயன் பெறுகிறார்கள் என்பதனை விளக்குவதன் மீதும் மையம் கொண்ட கருத்துருவை அடிப்படையாகக் கொண்டது.
  - ○ விவசாயிகளுக்கு அத்தியாவசிய நிதியியல் விழிப்புணர்வுச் செய்திகளைப் பரப்புவதற்காக RBI வங்கியானது ஜுன் மாதத்தில் தூர்தர்ஷன் மற்றும் அகில இந்திய வானொலி ஆகியவற்றின் மூலம் மையப்படுத்தப்பட்ட வெகு ஜன ஊடகப் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.

6. ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச தினம் என்று கொண்டாடப்படுகிறது?

**விடை**: ஜுன் 4

**விளக்கம்**

- ஆக்கிரமிப்பால் பாதிக்கப்பட்ட அப்பாவி குழந்தைகளுக்கான சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 4 அன்று ஐக்கிய நாடுகளால் அனுசரிக்கப்படுகின்றது
  - ○ இந்நாளானது 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 அன்று ஏற்படுத்தப்பட்டது
  - ○ இது உண்மையில் 1982 ஆம் ஆண்டின் லெபனான் போரினால் பாதிக்கப்பட்டோரின் மீது கவனம் செலுத்தியது. பின்னர் உலகளாவிய அளவில் இத்தினம் உருவாக்கப்பட்டது

7. 2019 ஆம் ஆண்டுக்கான உலக சுற்றுச்சூழல் தினத்தின் (WED) கருத்துரு என்ன?

**விடை** : "காற்று மாசுபாடு"

**விளக்கம்**

- உலக சுற்றுசூழல் தினம் ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 5 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
    - நமது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்காக விழிப்புணர்வு மற்றும் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே ஐக்கிய நாடுகளின் முதன்மை கொள்கையாகும்.
    - 2019 ஆம் ஆண்டுக்கான கருத்துரு "காற்று மாசுபாடு" ஆகும்.
    - The theme for 2019 is "Air pollution".
    - 2019 ஆம் ஆண்டுக்கான தொகுப்பு நாடு சீனா.

8. உலக உணவு பாதுகாப்பு தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை** : ஜூன் 7

**விளக்கம்**

- ஜூன் 7-ம் தேதி ஒவ்வொரு ஆண்டும் உலக உணவு பாதுகாப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - 2019 ஆம் ஆண்டின் கருத்துரு : 'உணவு பாதுகாப்பு, எல்லோருடைய பணியாகும்'.

9. ஜூன் 10 யாருடைய பிறந்த தினம்?

**விடை**: ஆம்பியர்

**விளக்கம்**

- ஜீன் -10 ஆம்பியர் பிறந்த தினம்
    - மின்சாரத்துக்கும் காந்தவியலுக்கும் உள்ள தொடர்பை விளக்கி மின்காந்தவியல் என்ற துறை உருவாக காரணமாக இருந்தவர்
    - இவரின் நினைவாக மின்னோட்டத்தின் அலகுக்கு "ஆம்பியர்" என பெயர் வைக்கப்பட்டது

10. உலக குழந்தை தொழிலாளர்கள் எதிர்ப்பு தினம் எந்த அமைப்பால் கொண்டுவரப்பட்டது?

**விடை** : சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)

**விளக்கம்**

- சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினத்தை 2002 ல் கொண்டுவந்தது
    - உலகளாவிய அளவில் குழந்தை தொழிலாளர் முறையை கவனத்தில் எடுத்துக் கொள்ளவும், அதைத் தடுக்க தேவையான நடவடிக்கைகளையும் முயற்சிகளையும் மேற்கொள்ளவும் அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 12ம் தேதி உலக குழந்தை தொழிலாளர்கள் எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது.

11. 2019 ஆம் ஆண்டின் சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினத்தின் கருத்துரு என்ன?

**விடை:** "இன்னும் உறுதியுடன் எழுந்து நில்" Still Standing Strong

**விளக்கம்**

- ஜுன் 13 அன்று உலக அளவில் சர்வதேச வெளிறல் விழிப்புணர்வு தினம் (International Albinism Awareness Day) அனுசரிக்கப்படுகின்றது.
    - இது வெளிறல் குறித்த தொன்மத்தை அகற்றுவதற்கும், அது குறித்த களங்கத்தை குறைப்பதற்கும், சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், வெளிறலுடன் வாழும் மக்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கும் அனுசரிக்கப்படுகின்றது.
    - இது வெளிறலுடன் வாழும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து ஊக்கப்படுத்துவதற்காக, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையின் தீர்மானத்தினால் 2015 ஆம் ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகின்றது.
    - இந்த ஆண்டின் இத்தினத்தின் கருத்துரு "இன்னும் உறுதியுடன் எழுந்து நில்" என்பதாகும்.
    - **Theme : Still Standing Strong**

12. 2019 ஆண்டின் உலகம் முழுவதும் உலக குருதிக் கொடையாளர் தினத்தின் கருத்துரு என்ன?

**விடை** : ''அனைவருக்குமான பாதுகாப்பான இரத்தம்'' "Safe blood for all"

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 14 அன்று உலகம் முழுவதும் உலக குருதிக் கொடையாளர் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
    - இந்த நிகழ்வு உயிர் காக்கும் இரத்தத்தைக் தானாகவே முன்வந்து கொடுக்கும் குருதிக் கொடையாளர்களுக்கு நன்றி செலுத்துகின்றது இது தொடர்ந்து இரத்தம் வழங்குதல் குறித்து விழிப்புணர்வை எற்படுத்துகின்றது.
    - இந்த ஆண்டின் உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை நடத்தும் நாடு ருவாண்டா ஆகும்.
    - இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு ''அனைவருக்குமான பாதுகாப்பான இரத்தம்'' என்பதாகும்
    - Theme of World Blood Day 2019 is "Safe blood for all"

13. உலக காற்று தினம் எப்போது?

**விடை** : ஜுன் 15

**விளக்கம்**

- ஜுன் 15 உலக காற்று தினம்
    - ஐரோப்பிய காற்று ஆற்றல் ஆணையம், உலகளாவிய காற்று ஆற்றல் மன்றம் ஆகியவை இணைந்து இத்தினத்தை கடைபிடிக்கின்றன.
    - Theme – Less $co_2$ and cleaner air

14. ஜுன் 17 எந்த தினமாக அனுசரிக்கப்பட்டுள்ளது?

**விடை** : உலகம் பாலைவனமாதல் மற்றும் வறட்சி ஒழிப்பு தினம்

**விளக்கம்**

- ஜுன் 17 ''உலகம் பாலைவனமாதல் மற்றும் வறட்சி ஒழிப்பு தினம்''
    - Theme – சுற்றுச்சூழல் பாதிப்பை முழுவதுமாக தடுக்க முயல்வோமானால் பாலைவனமாதல் மற்றும் வறட்சி ஏற்படுவதை தடுக்கலாம்.

15. உலக மூத்தோர் கொடுமை விழிப்புணர்வுத் தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** ஜுன் 15

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 15 அன்று உலக மூத்தோர் கொடுமை விழிப்புணர்வுத் தினம் அனுசரிக்கப்படுகின்றது.
    - மூத்த குடிமக்கள் மீதான கொடுமைகள் மற்றும் அவர்களைப் பாதிப்படையச் செய்தல் ஆகியவற்றிற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப்படுகிறது.
    - மூத்தோர் கொடுமைகளைத் தடுத்தலுக்கான சர்வதேச அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கையைத் தொடர்ந்து 2011 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐ.நா சபையினால் இத்தினம் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்டது.

16. வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்குப் பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** ஜுன் 16

**விளக்கம்**

- ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 16 அன்று வெளிநாட்டிலிருந்து குடும்பத்திற்கு பணத்தை அனுப்புதலுக்கான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகின்றது.
    - இந்தத் தினத்தின் நோக்கம் இந்தப் பங்களிப்புகள் மில்லியன் குடும்பங்கள், சமூகங்கள், நாடுகள் மற்றும் ஒட்டுமொத்தப் பிராந்தியங்களின் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த ஒரு மிகப்பெரிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்

17. உலக அரிவாள் உயிரணு(செல்) தினம் என்று அனுசரிக்கப்படுகின்றது?

**விடை:** ஜுன்-19

**விளக்கம்**

- 2019 ஆம் ஆண்டு ஜுன் 19 அன்று உலக அரிவாள் உயிரணு (செல்) தினம் அனுசரிக்கப்படுகின்றது.
    - உலக அரிவாள் உயிரணு நோய் (SCD-Sickle cell disease) குறித்தும் அதன் சிகிச்சை முறைகள் குறித்தும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.
    - SCD என்பது ஹுமோகுளோபினின் மரபுவழி மரபணு ஒழுங்கின்மையாகும்.

18. உலக அகதிகள் தினம் என்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** ஜூன் 20

**விளக்கம்**

- உலகெங்கிலும் உள்ள அகதிகளின் நிலைமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த உலக அகதிகள் தினம் 2019 ஜூன் 20 அன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.
  - கருப்பொருள்: # அகதிகளுடன் ஒருபடி உலக அகதிகள் தினத்தில் ஒருபடி எடுக்கவும்.
  - Theme: # Step With Refugees – Take A Step on World Refugee Day.

19. சர்வதேச யோகா தினத்தில் ஆயுஷ் அமைச்சகத்தால் தொடங்கப்பட்ட செயலி எது?

**விடை** :Yoga Locator App

**விளக்கம்**

- 5 வது ஆண்டு சர்வதேச யோகா தினம் 2019 ஜீன் 21 அன்று அனுசரிக்கப்பட்டது.
  - சர்வதேச யோகா தினம் 2019-க்கு இரண்டு கருப்பொருள்கள் உள்ளன, ஐக்கிய நாடுகள் கருப்பொருளை "காலநிலை நடவடிக்கைக்கான யோகா" என்றும், ஆயுஷ் அமைச்சகம், யோகா தினத்திற்கான கருப்பொருளை "இதயத்திற்கான யோகா" என்றும் அறிவித்துள்ளது.
  - ஆயுஷ் அமைச்சகத்தால் "யோகாலொக்கேட்டர் என்னும் செயலி"–Yoga Locator App தொடங்கப்பட்டது

20. சர்வதேச இசை தினம் என்று அனுசரிக்கப்படுகிறது?

**விடை:** ஜீன் 21

**விளக்கம்**

- சர்வதேச இசை தினம் ஒவ்வொருஆண்டும் ஜீன் 21 அன்று அனுசரிக்கப்படுகிறது
  - 2019 ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் "சந்துப்புகளில் இசை" என்பதாகும்
  - Theme: music at intersections

21. ஐ.நா பொதுச் சேவை தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை** :“ஜூன் 23”

**விளக்கம்**

- ஜூன் 23–ஐ.நா பொதுச் சேவைதினம்
    - நோக்கம் - பொதுச்சேவையை ஊக்குவிக்கவும் சேவை புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி பாராட்டு தெரிவிக்க ஐ.நா பொதுச்சபை கடைபிடிக்கிறது.
    - தலைப்பு– “சேவைகள், புதுமையான மாற்றம் மற்றும் பொறுப்புணர்வு நிறுவனங்கள் வழங்குவதன் மூலம் நிலையான அபிவிருத்தி”

22. சர்வதேச ஒலிம்பிக் தினம் எப்போது?

**விடை** : ஜூன் 23

**விளக்கம்**

- ஜூன் 23 –சர்வதேச ஒலிம்பிக் தினம்
    - ஜூன் 23, 1894-ம் ஆண்டு முதன் முதலாக ஒலிம்பிக் போட்டிகள் பாரீஸ் நகரில் தொடங்கப்பட்டது.

23. போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான 2019 சர்வதேச தினத்திற்கான கருப்பொருள் என்ன?

**விடை** : “நீதிக்கான ஆரோக்கியம், ஆரோக்கியத்திற்கான நீதி”.

Theme : “Health for Justice, Justice for Health”

**விளக்கம்**

- போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினமாக ஜூன் 26ஐ ஐக்கிய நாடுகள் சபை கடைபிடிக்கிறது.
    - போதைப்பொருள் இல்லாத ஒரு சர்வதேச சமூகத்தின் இலக்கை அடைய நடவடிக்கை மற்றும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டின் வெளிப்பாடாக இந்த நாள் ஐக்கிய நாடுகள் சபையால் கொண்டாடப்படுகிறது.

- போதைப்பொருள் மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கு எதிரான 2019 சர்வதேச தினத்திற்கான கருப்பொருள் "நீதிக்கான ஆரோக்கியம், ஆரோக்கியத்திற்கான நீதி".
- Theme : "Health for Justice, Justice for Health"

24. சர்வதேச வீட்டு வேலை தொழிலாளர் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

**விடை** : ஜுன் 16

**விளக்கம்**

- வீட்டு வேலைத் தொழிலாளர்களுக்கு ரூ.25 கோடியில் நலத்திட்ட உதவிகளை தமிழக அரசு அறிவித்தது.
    - சர்வதேச வீட்டு வேலை தொழிலாளர்கள் தின விழாவில் தமிழக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நிலோபர் கபில் இவ்வறிவிப்பை வெளியிட்டார்.
    - சர்வதேச வீட்டு வேலை தொழிலாளர் தினம் - ஜுன் 16.

25. ஜுன் 26 எந்த தினமாக கடைபிடிக்கப்படுகிறது?

**விடை** : சர்வதேச சித்திரவதைகளுக்கு ஆளானவர்களுக்கு ஆதரவு தினம்

**விளக்கம்**

- ஜுன் 26 சர்வதேச சித்திரவதைகளுக்கு ஆளானவர்களுக்கு ஆதரவு தினம்
    - தேர்வு துளிகள்- சித்திரவதைகளுக்கு எதிராக 1987-ம் ஆண்டு ஜுன் மாதம் 26-ம் நாள் ஐ.நா வில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.
    - அதன் நினைவாக இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது

26. ஐக்கிய நாடுகள் சபையினால் எந்த தினம் நுண்ணிய, சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் தினமாக அனுசரிக்கிறது?

**விடை** : ஜுன் 27

**விளக்கம்**

- ஐக்கிய நாடுகள் சபையினால் ஜுன் 27 ஐ நுண்ணிய, சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களின் தினமாக அனுசரிக்கிறது.

- சர்வதேச வர்த்தக மையம், ஐக்கிய நாடுகள் சபை தனது முதன்மை அறிக்கையை வெளியிடும் : “SME போட்டித்திறன் அவுட்லுக் 2019 : சிறு வணிகங்களுக்கு பெரிய பணம்”.
- “The SME Competitiveness Outlook 2019 : Big Money for Small Businesses”.

27. தேசிய புள்ளியியல் தினம் எப்போது?

**விடை:** ஜுன் 29

**விளக்கம்**

- ஜுன் 29 => தேசிய புள்ளியியல் தினம்.
  - பேராசிரியர் மகளநோபிஸின் பிறந்த தினத்தை முன்னிட்டு இத்தினம் கொண்டாடப்படுகிறது.
  - மையக் கருத்து: “நீடித்த வளர்ச்சிக்கான இலக்கு”

## புத்தகம்

1. வாழ்க்கை எனக்குத் தெரியாமல் கற்றுத் கொடுத்த பாடங்கள் என்னும் சுயசரிதை யாருடையது?

**விடை:** அனுபம் கெர்

**விளக்கம்**

- பாலிவுட் நடிகர் அனுபம் கெர் தனது சுயசரிதையான வாழ்க்கை எனக்குத் தெரியாமல் கற்றுக் கொடுத்த பாடங்கள் Lessons Life Taught Me Unknowingly என்னும் புத்தகத்தை வெளியிடவுள்ளார்.
  - இது ஆகஸ்ட் 5, 2019 அன்று வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது

2. “A prime Minister to Remember Memories of a Military chief” என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?

**விடை** : சுஷில் குமார்

**விளக்கம்**

- "A prime Minister to Remember Memories of a Military chief" என்ற புத்தகம் வெளியிடப்பட்டது.
    - ஆசிரியர் : சுஷில் குமார்
    - இது முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பற்றியதாகும்.


**Useful Links**

Recent Exam Notifications : https://weshineacademy.com/updated-exam-notification/

Daily Current Affairs : http://weshineacademy.com/tnpsc-current-affairs/

Recent Update on Telegram : https://t.me/weshinedailyupdate

Useful YouTube Video : https://www.youtube.com/user/weshineacademy

Apply for TNPSC Group IV Exam : https://weshineacademy.com/tnpsc-group-4-exam-recruitment-notification-2019/